ஒரு கப்பற்படையென்பது வெவ்வேறு பணிசெய்வனவும், பல்வேறு பீரங்கி தாக்குதல் எல்லைகளையும், வேகங்களையும் உடைய பலதரப்பு—கப்பல்கள் கொண்டது என்பதை முன்பே அறிவோம். தலைமைக் கப்பலின் வரையும் அறையில் அப்படையின் கப்பல்களின் நிலையும் முடிந்த அளவு எதிரி கப்பல்களின் நிலையும் காட்டப்பட்டிருக்கும் ஒரு பெரிய படம் இருக்கிறது. ஒவ்வொரு உத்தரவும் 'அட்மிரல்' என்னும் படைத்தலைவனாலேயே பிறப்பிக்கப்படுகிறது. ஒவ்வொரு கப்பலிலிருந்து வரும் தகவலும் அவனுக்குத்தான் வருகிறது. அதன் மேல் தேர்ச்சிபெற்ற உத்தியோகஸ்தர்கள் படத்தில் சமயோஜிதமான நகர்த்தல்களைச் செய்கிறார்கள். கடலில் அனேக நூற்றுக்கணக்கான சதுர மைல்கள்மீது ஒவ்வொரு கப்பலில் இருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் மாலுமிகளுக்கும் தங்களுக்குக் குறிப்பிட்டிருக்கும் எதிரிக் கப்பலை மூழ்க்கடிப்பதைத்தவிர வேறு யுத்தப்போக்கே ஒன்றும் தெரியாது. எதிரிக் கப்பல்கள் நிதானமாகவும் தொந்திரவின்றியும் சுடாமலிருக்கும் பொருட்டு எதிரியின் ஒவ்வொரு கப்பலையும் தன் கப்பல்களில் ஒன்றோ பலவோ சதா சண்டை போட்டுக்கொண்டிருக்கும்படி செய்ய வேண்டியது அட்மிரலின் கடமை.

யுத்த தந்திரம்.

முன்பு கோடுகாட்டியபடி, யுத்த தந்திரமென்பது எளிது. அது 'ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லுதல்' (Line ahead) 'மார்புடன் மார்புறச் செல்வது' (Line

abreast) என்ற அணிவகுப்புகளின் கூட்டல் கழித்தல்கள் தான். ஆயினும் சுடப் படும் சத்துருவின் திட்டங்களும் கதியும் ஓயாமல் மாறுவதால் அட்மிரல் உத்தர விடுவது மிகவும் கஷ்டமான வேலை. இருந்தபோதிலும் தன் தலைமைக்கப்பலில் இருந்து, பிறக்கும் உத்தரவுகளுக்கு, அவை புரிந்தாலும் புரியாவிட்டாலும், கண் மூடித்தனமாக, தன் படையின் ஒவ்வொரு கப்பலும் கீழ்ப்படிந்து, கதிமாற்றிச் சுட்டுக்கொண்டிருக்கும்படி செய்யவேண்டியது அட்மிரலின் கடமை.

தொடுவானத்திற்கப்பால் வெகுதூரத்தில் சாரணவேலை செய்யும் வேகமான குரூய்ஸர்களால், எதிரிக்கப்பல்கள் இன்ன இன்ன வேகத்துடன் இன்ன இன்ன திசை நோக்கிச் செல்கின்றனவென்பது ஒவ்வொரு படைக்கும் எச்சரிக்கை செய்யப்படுகிறது. ஒவ்வொரு நல்ல மாலுமிக்கும் உலகிலுள்ள பெரிய படை களுடைய முக்கிய கப்பல்களின் உருவத்தோற்றம் தெரியுமானதால், எதிரிக் கப்பல்களின் பெயர்களும், ரகங்களும் தகவல் அறிவிக்கப்படுகிறது. குரூய்ஸர் கள் எதிரிக்கப்பல்களைச் சந்தித்து பின்தொடருவதுடன், தங்கள் படையின் கப்பல் களைப்பற்றி எதிரி தகவலறியவொட்டாமல் தடுத்துநிற்கும். குரூய்ஸர்களுக்கும், பின் நிற்கும் பெரும் யுத்தக்கப்பல்களுக்கும், இடையே, சாரணக்கப்பல்களை தாண்டிச்செல்லும் எதிரிக் கப்பல்களைத் தாக்க, நீர்மூழ்கிகள் ஒளிந்து நிற்கும்.

கரும்பலகையில் நான் வரைந்திருக்கும் 'ஒன்றன் பின் ஒன்று செல்வது' 'மார்புறச்செல்வது' இவைகளை கவனியுங்கள். யுத்தத்தில் இலட்சியம் நமது கட்சியின் பீரங்கித் தாக்குதல் பலமாக இருக்கவேண்டும்,—அதாவது (broad-side),அகன்றபக்கத்திலிருந்து எல்லாப் பீரங்கிகளிலிருந்தும் ஏககாலத்தில் சுடுவது; இல்லாவிட்டால் முடிந்தவரை கனமான பீரங்கிகளின் தாக்குதலைச் செய்வது; அத்துடன் சத்துருவின் அகன்ற பக்கதாக்குதலுக்கு நமது கப்பல்கள் இலக்காகக் கூடாது. மிக்க சாவதானமான அணிவகுப்புகள் அடிப்படையான மேலேகூறிய இரண்டும்தான் என்பதைக் காண்போம்; ஏனெனில் அவற்றில் ஒவ்வொன்றிலும் சில கப்பல்கள் மற்றவைகளைப் பாதுகாத்து, நீர்மூழ்கிகளுக்குத் திரைபோல் இருக்கின்றன. தாக்குதலில் மேலானது என்று சொல்லப்படுவது, சத்துருவின் சமீபத்திலுள்ள கப்பல்கள் பின்னுடி இருக்கும் கப்பல்களை மறைத்து நின்றும் நமது கப்பல்களெல்லாம் எதிரிக் கப்பல்களின் மீது ஏககாலத்தில் சுடும்படியான நிலைமையில் இருக்கவேண்டும் (படத்தைப் பார்க்கவும்). இவ்விதம், நல்ல தலை வர்கள் தன்படையைக் காட்டிலும் பலமான எதிரிப்படையை இரண்டாகப் பிரி த்து, ஒன்றை மேல்கண்டவாறு தாக்கி ஜயித்து, பின்பு மற்ற பாதியை எதிர்ப் பதும் வழக்கமுண்டு.

ஒரு அட்மிரல் யுத்தத்தில் அபஜயமடைவதைக் கண்டவுடன் இரவையோ அல்லது புகைப்படலத்தையோ உதவியாகக்கொண்டு, ஓடும்பொழுதே தன்னைப் பின்தொடர்ந்து வருபவர்களுக்கு ஆபத்து விளைவிக்குமாறு கண்ணிகளை இறைத்துக் கொண்டும், தன் படையைத் திரட்டிக்கொண்டும் பின்வாங்க முயலுகிறான். பின்வாங்கும் படைக்கு இந்தச் சௌகர்யமும் ஒன்றுண்டு:—சத்துரு இவனை

நோக்கி விரைந்துவருவதால் இவனுடைய இடிமீன்கள் (torpedoes) மிகுந்த பயனை அளிக்கக்கூடியதாயிருக்கின்றன. துயர்ந்துவரும் படைக்கு முன்னணி விஸ்தீர்ணம் அதிகமிராது. அது ஒன்றன்பின் ஒன்ருக வந்தால் காபந்தின்பொருட்டு அது அவ்வாறே செல்லும்; பின்வாங்கும்படை இடச்சாரியிலோ வலச்சாரியிலோ இருந்தால் விரட்டும் படைத்தலைவன் தன் கப்பல்களை மார்புறச் செல்லும்படி கட்டளையிடுகிருன்.

உத்தரவு அனுப்புதல்.

குண்டுகளின் கனத்த தாக்குதலுக்கிடையே தன் தலைமைக் கப்பலின் படம் வரையும் அறையிலிருந்தவாறே அட்மிரல் எவ்வாறு தன் உத்தரவுகளைப் பிறப்பிக்கிருன்? ஸிக்னல் (சமிக்ஞை) செய்வதற்கு அநேக வகைகள் உண்டு. கம்பி இல்லாத் தந்திமூலம் எளிதில் செய்யலாம் என்று நீங்கள் நினைக்கலாம். நடப்பில் அது அப்படியல்ல. தந்திகள் ரகசிய வார்த்தை களிலிருந்தாலும்எதிரிக் கப்பல்களிலிருக்கும் தந்திகளை கிரஹிக்கும் கருவிகள் பாதிக்கப்படலாம்; அதிலிருந்து தந்திவரும் இடமும் அட்மிரலிருக்கும் ஸ்தானமும் வெளியாகி ஆபத்துக்குள்ளாகும். அதனுல் அவசியமான பிரசக்திகளில் அட்மிரலுக்கும் உத்தரவு பிறப்பிவிக்கப்படுபவனுக்கும் இடையே ஏதாவது ஒரு சிறு கப்பல்மூலம் பாவட்டா மூலமாகவோ, அல்லது ஸெமபோர் (Semaphore) கையின்மூலமாகவோ ஸிக்னல் செய்வதுதான் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. (பாவட்டாக்கள் மூலம் மனிதர்கள் செய்யும் சமிக்ஞைகளையே ஒரு கம்பத்தின் மீது ஏற்றிவைக்கப்பட்டு லீவர்கள்மூலம் வேலைசெய்யும் இரண்டு பெரிய மரக்கைகளுக்கு ஸெமபோர் என்று பெயர்). உத்தரவுகளைத் தவறுதலன்னியில் ஸிக்னல் மூலம் அனுப்புவதும் சரிவர கிரகிப்பதும் அத்யாவச்யமானது. கப்பல் சிப்பந்திகளுள் ஸிக்னல் செய்பவர்கள் ஒரு முக்கியமான வகுப்பினர்.

அட்மிரல் சண்டையைக் கருதும் கோணத்திலிருந்து வரம்புகளை மட்டில் கொஞ்சம் கொஞ்சம் காட்டினேன். யுத்தத்தில் உபயோகிக்கும் ஆயுதங்களைப் பற்றி கேட்க விரும்பினுல் மேற்கூறியதைக் காட்டிலும் விரிவாகக்கூற அவகாசம் இல்லை. என் கடைசி உபந்யாசத்தில் நீர்மூழ்கி, இடிமீன் வெடிகளைப்பற்றிச் சொன்னேன். ஆதலால் இதற்குமேல் பெரும் யுத்தக் கப்பல்களின் முக்கிய சக்தி புஜமென்று சொல்லக்கூடிய பீரங்கிகளையும் அவைகளைச் சுடுவதைப் பற்றியும் கூறப்போகிறேன்.

பீரங்கிகள்.

முன் உபந்யாசத்தில் பீரங்கி வாய்களின் அகலத்திற்கு ஒரு எல்லையுண்டு என்று கூறினேன். அந்த அளவைவிட பெரிய பீரங்கிகளை வார்க்க முடியாததலால் அந்த வரம்பு ஏற்பட்டதல்ல; நவீன கப்பல்களில் அநேக தினிசுப் படைக்கலங்கள் அமைக்கவேண்டியிருப்பதால், 16-அங்குல பீரங்கிகளுக்கு மேற்பட்ட பீரங்கிகளையும் அவைகளின் சாமக்கிரியைகளையும் கப்பல்களில் ஏற்றுவதாயிருந்தால், கப்பல்களும் அதற்கேற்றவாறு மிகப்பெரிதாகவும் பருமனுகவும் கட்டவேண்டும், அக்கப்பல்கள் தங்கக்கூடிய துறைமுகமோ பழுது

பார்க்கும் ஸ்தலமோ கிடைப்பது அசாத்தியம், என்ற விஷயங்களை விளக்க முயன்றேன். மேலும் தாக்கும் சக்தி பீரங்கிகளால் சுடப்படும் குண்டின் கனத்தைப்பொருத்ததல்ல; குறிப்பிட்ட காலத்துக்குள் எவ்வளவு தடவை அழிக்கும் குண்டுகளின் எடைமானத்தை சீக்கிரமாகவும் அடிக்கடியும் சுடுகிறது என்பதைப் பொருத்தது.

16-அங்குல பீரங்கி சுமார் 20-மைல்கள் வரை சுடும். 20-மைலிலிருந்து வேகமாகச் செல்லும் எதிரிக் கப்பல் போன்ற ஒரு குறியை பேதிப்பது கடினம். அதிலும் ஆகாயம் தெளிவின்றி இருந்தாலும் புகைப்படலம் சூழ்ந்திருந்தாலும், அநேக தடவை எய்தினுல் குறியைப் பிளப்பது சில தடவை தான் முடியும். அத்துடன் பீரங்கி பெருக்கப் பெருக்க குண்டு திணித்துச் சுட தாமதமாகும்; ஆனதால் விட்டு விட்டுச் சுடும் இதனைக் காட்டிலும் சிறிய பீரங்கிகளின் வேகமான சுடுதல் ஜாஸ்தி பயனளிக்கும். ஆயினும் சத்துரு கப்பல்களின் மர்ம ஸ்தானங்கள்—எஞ்சின்கள், வெடிகளையும் குண்டுகளையும் வைக்கும் அறை, முக்கிய விசைகள் இருக்கும் கப்பலின் மத்திய பாகம்—மிகவும் கனமாக கவசம் பூண்டிருப்பதால், அவைகளில் சேதம் உண்டுபண்ணுவது பலமான வெடி குண்டால்தான் சாத்தியம். ஆனதால் பெருங்கப்பல்கள் மட்டில் ஏற்றிச் செல்லும் பெரும் பீரங்கிகள்தான் யுத்தத்தை முடிவு செய்யக்கூடியதால் இறுதி அதிகாரம் உடையன. 'என்னை மறப்பாயோ' என்று ஆருவடுச் செய்யக்கூடிய பீரங்கிகளைப் பெரும் யுத்தக் கப்பல்களும் (battleships) யுத்த குரூய்ஸர்களும் (Battle cruisers) தான் தாங்கிச் செல்கின்றன. அத்துடனல்லாமல் அவைகள் தங்களுடைய மத்திய அளவு பீரங்கிகளால்—அதாவது $5\frac{1}{4}$ முதல் 8-அங்குலம் நன்ருகப் போர் புரிகின்றன. அவைகளிலிருக்கும் ஆகாயப் பீரங்கிகள் விமானங்களைத் தாக்குகின்றன.

ஜல அமுக்கிச்சக்தியால் (hydraulic power) சுடும், மனிதருடன் சுத்தக் கூடிய ஒரு கூண்டு அல்லது கவசம்பூண்ட அறையில், மூன்று அல்லது நான்கு சேர்ந்த தொகுதிகளில் பெரும் பீரங்கிகளிருக்கும். வேறு வேறு கப்பல்களில் கூண்டுகள் வேறுவேருக இருக்கும். சிலவற்றில் பக்கத்தில் ஒனருகவோ, முன்னும் பின்னுமாகவோ இரண்டுதானிருக்கும். இவ்விதம் ஒன்பது அல்லது பன்னிரெண்டு பிரம்மாண்டமான பீரங்கிகளும், அகன்ற பக்கத்திலிருந்து சுடும்பொழுது ஒரே பக்கம் சுற்றப்படலாம். ஆனல் இவைகள் யுத்தத்தில் விரட்டவோ அல்லது விரட்டப்பட்டால் எதிர்க்கவோதான் அவைகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்பதைக் கண்டோம். மத்தியப் படைக்கலங்களாகிய $5\frac{1}{4}$ அல்லது 6-அங்குல பீரங்கிக் கூண்டுகளும் பெரும் பீரங்கிக் கூண்டுகளின் பேரிலோ, அல்லது கப்பற்தட்டில் வேறு இடங்களிலும் அமைப்பதால், முன்னும் பின்னும் அல்லது அகன்ற பக்கத்திலும் சுடலாம். ஆயினும் பீரங்கிகள் எவ்வாறு சுடுகின்றன, எவ்வாறு குறி இலட்சிகரிக்கப்படுகிறதென்பதை நாம் அறிய வேண்டுமானல், யுத்தக்கப்பல்கள், குரூய்ஸர்கள், நாசகாரிகள், இவைகளின் வெவ்வேறு அமைப்பைப்பற்றி இங்கு விஜாரிக்க இடமில்லை. குழாய் (Barrel), குண்டு அடைக்கும் இடம் (Breach)

என்று இரண்டு பாகங்களாகச் செய்யப்பட்டு பீரங்கி இணைக்கப்படுகிறது. குண்டு அடைக்கும் இடமானது குண்டும்-மருந்தும் திணிக்கப்பட்ட பிறகு குழாயின் தலைப்பில் நன்ருக அமைக்கப்பட்ட பலமான கதவால் சாத்தப்படும் பாகம். குண்டு மருந்து என்று சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்க. இவை தனியாக உபயோகப் படுத்தப்படுவது பெரும் பீரங்கிகளில்தான். 16-அங்குல பீரங்கியின் குண்டின் கனம் ஒரு டன்னுக்குமேல் இருக்கும். பின்னிருந்து பத்தவைத்து அதை வெடிக் கச்செய்யும் கார்டைட் (cordite) மருந்தின் கனம் 640-பவுண்டு இருக்கும். இரண் டையும் வேகமாகத் திணிப்பது சிரமசாத்தியமானது. (நடுத்தரமானதும் சிறிது மான பீரங்கிகளில் குண்டும்-மருந்தும் ஒன்ருக அடைக்கப்பட்டிருக்கின்றன.) குண்டு அடைக்கும் இடத்தில் இவற்றைத் திணித்து கதவை மூடியபிறகு பீரங்கி சுடுவதற்கு தயாராயிருக்கிறது. சுடுவது பீரங்கிக் கூண்டிலிருந்தல்ல. விசையறை யிலிருந்து (Control Room) அங்கிருக்கும் ஒரு குதிரையை (Trigger) அமுக்குவ தால் ஒரு மின்சாரக்கம்பியானது மருந்தைப் பற்றவைத்து அதனுல் குண்டை வெளியேற்றுகிறது.

பீரங்கி அறை.

கூண்டிலிருக்கும் பீரங்கிகளை உபயோகிக்கும்போது அநேக விஷயங்கள் பரிசீலனை செய்யப்படவேண்டும். அவைகளாவது,—குண்டுகள் பாயவேண்டிய நீண்ட தூரம், தன் கப்பலின் வேகம், எதிரிக் கப்பலின் வேகம், குண்டு ஆகாயத்தில் உயரே சென்று இரங்கவேண்டியிருப்பதில் சுமார் 20,000-அடி உயரம் வரையுள்ள அதின் போக்கில் காற்றின் வேகம், பூமி சுழல்கிறவேகம். கடலில் குண்டுகள் நீண்ட தூரத்திலுள்ள லக்ஷியங்களை அடைவதற்கு சில க்ஷணங்கள் செல்லும்; அதற்குள்ளாக பூமி அதன் கீழ் சற்று சுழன்று நகர்ந்திருக்கும். இதனுல்தான் பீரங்கி மனிதர்களால் அவைகள் அவர்களிஷ்டம்போல் சுடப் படுவதில்லை. வெகு தூரம் பார்க்கக்கூடிய கப்பலின் உன்னத ஸ்தானத்திலுள்ள மத்திய சுடும் அறையிலிருந்து (Central fire control) சுடப்படுகிறது. கப்ப லின் கப்பித்தான் லக்ஷியத்தைக் கண்டவுடன் விசை அறையிலிருக்கும் (Control power) விசை உத்தியோகஸ்தனுக்கு அறிவிக்கிருன். அந்த உத்தியோகஸ்தன், முறையே கீழே உள்ள கப்பலின் ஜீவநாடி என்று சொல்லக்கூடிய டிரான்ஸ் மிட்டிங் அறை (Transmitting room)-க்கு விவரங்களை டெலிபோன் மூலம் அறிவிக்கிருன். பீரங்கிகளிலுள்ள தூரம் கண்டுபிடிக்கும் கண்ணுடிகள் மூலம் பல பீரங்கிக் கூண்டுகளிலிருந்து கிடைக்கும் எண்களின் சராசரியை இங்கே நிபுணர்கள் கணக்கிட்டு பீரங்கியின் லக்ஷியம் இருக்கும் சராசரி தூரத்தைக் கண்டுபிடிக்கிருர்கள். (இந்தக் கருவியானது ஒரு படத்தின் மூலம் காண்பிக்கப்படும்). இப்படிக் கண்டு பிடிக்கப்பட்ட தூரம் பீரங்கிக்காரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. உடனே பீரங்கி கள் லக்ஷியத்தை நோக்கி சரிப்படுத்தி வைக்கப்படுகின்றன. அது முடிந்ததும் டிரான்ஸ்மிட்டிங் அறையிலுள்ளவர்கள், விசை அறையிலுள்ள பீரங்கி சுடுப வனுக்கு அறிவிக்கின்றனர். அவன் பீரங்கிக்கு அருகிலுள்ளவர்களுக்கு டிரான்ஸ் மிட்டிங் அறையின் மூலமாகவே குண்டை பீரங்கியில் திணித்து கெட்டிக்க

உத்தரவு கொடுக்கிருர். பீரங்கி கெட்டித்தானவுடன் டிரான்ஸ்மிட்டிங் உத்தியோகஸ்தருக்கு ஸிக்னல் கிடைக்கிறது. அதை அவர் விசையறைக்கு டெலிபோன் செய்கிருர். உடனே விசையறையிலிருக்கும் பீரங்கி நிபுணர் குதிரையை அமுக்கி எந்தெந்த பீரங்கிகளைச் சுடவேண்டுமோ அவைகளை மின்சாரக் கம்பிகள் மூலம் வெடிக்கச் செய்கிருர். டிரான்ஸ்மிட்டிங் அறைக்கு ஓய்வொழிவில்லாமல் வேலை அளித்துக் கொண்டிருக்கும் இது, ஒரு பின்னலான விஷயம். ஏனெனில் அவர்களுக்கு ஒவ்வொரு பீரங்கியும் மறுபடியும் சுடுவதற்கு எப்பொழுது தயாராகயிருக்கிறதென்ற விவரம் தெரியவேண்டும். அத்துடன் கப்பல்கள் தங்கள் கதியை மாற்றுவதற்கேற்பவும் ஜாஸ்தி அலைகளால் ஆடி ஏறி இறங்குவதற்கேற்பவும் தூரம் அல்லது வேகக் கணக்குகளில் ஏற்படும் பிழைகளை மாற்றிச் சரியாகக் கணக்கிட வேண்டும். (கப்பல் ஆடுவதால் குறி தப்பாமலிருக்க ஒரு கைராஸ்கோபிக் (Gyroscopic device) யந்திரம் உண்டு. அதனுல் கப்பல் ஆடி ஒரு நிலைக்கு வரும்வரை பீரங்கி சுடுவது தானுகத் தடைப்படும். இதன் மூலம் சுடவேண்டிய விசை உத்தியோகஸ்தன் அலையின் வேகத்தால் குறி தவறுவதைக் காணமாட்டான்). முதல் குண்டு குறிக்கு அப்பால் விழலாம். விசை உத்தியோகஸ்தன் குண்டு வீச்சு தூரத்தைக் குறைக்கச் சொல்லுவான். அடுத்தது குறிக்கு இப்பாலே குறைந்து விழும். இந்த இரண்டும் ஒரு அளவின் வளைவாகும். குறிபார்ப்பதை இவற்றிற்கேற்ப சரிப்படுத்திச்சுட்டால் மூன்ருவது குண்டு சரியாகப் பிடிக்கவேண்டும். ஒன்று தைத்ததைக்கண்டவுடன், அவ்வளவும் 'சால்வோக்களாக' (Salvos), அதாவது பெரிய பீரங்கிகளில் பாதி கூண்டுகளிலிருக்கும் ஒவ்வொன்றும் சுடுகின்றன. அல்லது நிச்சயமாக சுடக்கூடிய அளவைக்குள் எதிரியிருந்தால் அகன்ற பக்கத்தில் எவ்வளவு பீரங்கிகள் ஏக காலத்தில் சுடமுடியுமோ, அவ்வளவும் சுடுகின்றன.

நரகம் (Inferno).

சத்தம் கேட்க உனக்குப் பொருக்காவிட்டால் சண்டை போடும் யுத்தக் கப்பலின் தட்டிலிருக்காதே. அதிலிருக்கும் பெரிய பீரங்கியின் அதிர்ச்சி சொல்லி முடியாது. அதனுல் தான், பீரங்கிக்கு வத்தி வைப்பவன் சுடும் பொழுது, ஒரு சோமகலம் அடிக்கப்படுகிறது. கப்பலில் வெளியே நிற்பவர்களுக்கு இது ஒரு எச்சரிக்கை. உடனே அவர்கள் அதிர்ச்சி காதில் தாக்கி செவிடுபடுத்தாமல் இருப்பதற்காக பஞ்சை வைத்து அடைத்துக்கொள்ளுகிருர்கள், அல்லது டெலிபோன் தலைக்கூட்டை மாட்டிக்கொள்வார்கள். கவசம் பூண்ட இதரக் கூண்டுகளிலிருப்பவர்களும் பீரங்கிவாய்க்கு 80 அடிக்கு அப்பால் நிற்பவர்களும் அதிர்ச்சியைக் குறைத்துக் கேட்கலாம். ஆனுல் அவர்களும் சும்மா விடப்படமாட்டார்கள். பீரங்கியை சுட்டவுடன் கப்பல் முழுவதும் ஒரு குலுக்குக்குலுக்கி நிமிரும். பீரங்கி ஒரு உதை உதைத்துப்பின் செல்லும் பொழுது பலமான காத்துகள் அடிக்கும். மருந்தடைக்கும் தலைப்பக்கத்தைத்திறந்தவுடன் துர்கந்தமானவும் மூக்கை அறுக்கும் புகைப்படலங்கள் பீரங்கிக்கூடு பூராவையும் நிரப்புகின்றன. யுத்தம் நடக்க நடக்க கூண்டு மின்சார விளக்குகளால் எத்தப்பட்டிருந்தும் இருளும்

உஷ்ணமும் நிறைந்த ஒரு குழியாகிறது. இதனிடையே பீரங்கியும் அதற்கு குண்டுகளைத் திணிக்கும் யந்திரங்களின் பேரிரைச்சலும்! சுருங்கச் சொன்னால், சண்டையில் ஈடுபட்டிருக்கும் யுத்தக் கப்பலைக் காட்டிலும் உலகில் நரகத்தை நாம் கற்பித்தாலும் முடியாது; இந்நரகம் நாமே சிருஷ்டித்தது; அதிலிருந்து வெளித் தப்ப முடியாது; தன் கப்பல் சத்தத்தைவிட, பிளக்கும் சேதமும், ரத்தக் களரியும், குழப்பமும் உண்டு பண்ணக்கூடியது, எதிரியின் அதிரும் குண்டுகளுக் குட்பட்ட கப்பல்; அக்குண்டு தப்பித்தவறி எஞ்ஜின் அறையிலோ வெடிகுண்டு அறையிலோ விழுந்தால் தப்பமுடியாத பயங்கரமான சாவை நிச்சயமாக விளை விக்கக்கூடியது.

ஆயினும், தன் மகனை யுத்த கடற் படைக்கு அனுப்பும் எந்த ஆங்கிலத் தாய் தந்தையர் இதைப் பற்றி எண்ணுகின்றனர்? டார்ட்மத் (Dart-mouth) கடற் பாடசாலையிலிருந்து தேரும் எந்தச் சிறுவன், அல்லது முதன் முதலில் கடற் படையில் சேரும் தக்க மாலுமி, என்றுவது ஒரு நாள் மேலே சொன்ன யுத்த சன்னிவேசத்தினிடையே தானில்லாவிட்டால், தன்னைப் பழக்கியதும், தன் உத்தியோக நாளும் அலுத்துச் சலுத்து, சப்புச்சவக்கென்று வீணாயிற்றென்று வருந்தமாட்டான்? "கடல் வாழ்வில் இதைவிட மோசமான விஷயங்கள் நிகழும்" என்பது ஒரு பழமொழி. அப்படியாயின், துருதுருத்து அலைந்து பிரவேசித்து, சாமர்த்தியமாக உழைத்து, தைரியமாக நடத்தி, ஜயங் கொண்டு முடித்து வெளிக்கிளம்பிய, ஒரு கடற் சண்டையின் வெற்றியும் புகழும் மனிதவாழ்க்கையின் சிகரம் என்றே நிச்சயமாகச் சொல்லவேண்டும்.

இத்துடன் முடிக்கிறேன். என் கடைசி உபந்நியாசத்தில் நீர் மூழ்கிகள், இடிமீன் வெடிகள், ஆழவெடிகள், கண்ணிகள் இவற்றை விளக்கினேன். ஆயினும், கவர்ச்சியுள்ள விளக்காத விஷயங்கள் நூற்றுக்கணக்கிலிருக்கின்றன. ஸிக்னல் செய்வது, விமானமேற்றிச்செல்லும் முறை, கண்ணி வீசுதல், கண்ணி அழித்தல், ஓரிபிஸா கட்டுமரங்கள் (Orepesa floats) துறைமுகங்களின் காபந்து, அவசர நடவடிக்கைகள், கப்பலின் படகுகள், கப்பலில் வாழ்க்கை, வியாதியும், டாக்டர் களும், சம்பள பட்டுவாடா, இத்யாதி, இத்யாதி. இவற்றில் உங்களுக்கு அக்கரை இருக்குமாயின் எங்கள் யுத்த அறிக்கை நிலயத்துக்கு வந்து வாசியுங்கள். அங்கு, உங்களுக்கு அவற்றின் பரிபாஷையும் கொச்சையும் சற்றேனும் பழகி, அறைகுறையாகவேனும் ஒரு மாதிரி உங்கள் கற்பனைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்திப் பார்க்க முடியுமாயின், மேலே சொன்னவைகளும், சண்டைக் கதை களும் கடல் இதிகாசங்களும் உங்கள் ரத்தத்தை சுருசுருப்பாக விரையச்செய்யும்.

வார யுத்தச் செய்திகள்.

(22—11—40 லிருந்து 28—11—40 வரை).

ஒரு சிறந்த வெற்றி.—கோரிட்ஸாவைப் பிடித்தாய்விட்டது. பதினொரு நாட்களாக இடைவிடாது கடும்போர் புரிந்து வியாழக்கிழமையன்று, பிரிடிஷ் பீரங்கிப்படையை முன் அணியாய் வைத்துக்கொண்டு கிரேக்கர்கள் கோரிட்ஸாவுக்குள் பிரவேசித்தார்கள். கிரீஸ் தேசத்தில் எங்கே பார்த்தாலும் மணிகளை அடித்துக்கொண்டு, கொடிகளையும், 'லாரல்' தோகைகளையும் வீசிக்கொண்டு ஜனங்கள் சந்தோஷப்படுகிறார்கள். கோவில்களில் கூடி, இந்த க்ஷேமத்துக்கான வெற்றியைக் கடவுள் அளித்ததற்காக வந்தனம் செலுத்துகிறார்கள். எதிரிகளைக் கடலிலும் தோற்கடித்து, டாடிகானீஸ் தீவுகளிலிருந்தும் விரட்டிவிடவேண்டுமென்று பேசிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் இவ்விதம் சந்தோஷப்படுவதற்குக் காரணமுண்டு. நாலு வாரங்களுக்குமுன் அவர்கள் நிலைமை மோசமாய்த்தான் இருந்தது. இதாலியருடைய பெரிய சைன்யத்தைத் தங்களுடைய சிறு சைன்யம் எப்படி எதிர்க்க முடியுமென்று திகைத்து நின்றார்கள். ஆனால், அவர்கள் செய்த வீரச்சண்டையாலும், தந்திரத்தாலும், பிரிடிஷ் உதவியாலும் வெற்றி பெற்றார்கள். டாரண்டோ, பிரிண்டிஸி, பாரி, நேபிள்ஸ், டுராஸோ, வலோனா முதலிய இடங்களை பிரிடிஷ் விமானங்கள் தாக்கி இதாலிய சைன்யங்களுக்கு தளவாடங்கள் போகாது தடுத்தது கிரேக்கருக்குச் செய்த பேருதவியாகும். இதன் முடிவாக இப்பொழுது ஒரு இதாலியத்துருப்பாவது கிரீஸிலில்லாமல் விரட்டியாய்விட்டது. எதிரி தேசமாகிய அல்பேனியாவுக்குள் கிரேக்கர்கள் புகுந்து இதாலியர்களை விரட்டிக்கொண்டு போகிறார்கள். கேந்திர ஸ்தலமாகிய கோரிட்ஸாவைப் பிடித்துக்கொண்டதோடு, போக்ராடெட் (கோரிட்ஸாவுக்கு 22 மைல் வடகிழக்கேயுள்ளது), மாஸ்கோபாலிஸ், ஆர்கைரோகாஸ்ட்ரோ எல்லை இவைகளையும் பிடித்துக்கொண்டு, எல்பாஸன் (மத்திய-அல்பேனியா) ஸாண்டிக்வாரன்டினோ (எபைரஸ்) மார்க்கமாக முன்னேறிக்கொண்டுமிருக்கிறார்கள். ஆபிரிக்காவில் மேற்குப்—பாலைவனத்தில் இதாலியர்களிடத்திலிருந்து பிடுங்கிக்கொண்ட ஆயுதங்களே இப்பொழுது அவர்கள்மேல் பிரயோகிக்கப்படுகிறது. என்ன ஆச்சரியம்!

இதாலியர்கள் பின் வாங்குகிறார்கள். ஓட்டம் பிடிக்கிறார்கள். இதாலியர்கள் கணக்குப்படி நான்கு சைன்யப் பகுதிகளும், மற்றவர்கள் சொல்லுகிறபடி நான்கு பகுதிகள் இதாலியருக்கு அழிந்துபோயின. பலர் சிறைப்பட்டுவிட்டார்கள். தளவாடங்களைப் போட்டுவிட்டு ஓடுகிறார்கள் அல்லது அவைகளை கிரேக்கர்கள் கைப்பற்றிக்கொண்டு விடுகிறார்கள்.

இந்த வெற்றியிலிருந்து விசேஷமான பலனேற்படுமென்பதற்கு ஐயமில்லை. சைன்ய நஷ்டமும், தளவாட நஷ்டமும் அபரிமிதம். ஸலோனிகாவைப் பிடித்துக்கொள்ளும் பிரயத்தனம் வீணாயிற்று. ஐரோப்பிய யுத்தத்தின்

நிலைமையே மாறிவிட்டது. நேயக்கக்ஷியார்களுக்குத் தைரியமுண்டாகிவிட்டது. நடுநிலை நாடுகள் ஜாக்கிரதையாய் விட்டன. வெகு விரைவில் வெற்றியோடு யுத்தம் முடியுமென்று நம்பிக்கை வந்துவிட்டது.

நரியின் சுபாவத்தை ஒத்து இதாலியர்கள் ஓடும்பொழுதே ஊர்களுக்குத் தீ வைத்துக்கொண்டும், ஆகாரங்களை அழித்துக்கொண்டும், பிரமுகர்களைச் சுட்டுக்கொண்டும், ஸ்திரீ, புருஷர்களையும், குழந்தைகளையும் பிணையாக தூக்கிக் கொண்டும் போகிறார்கள்.

கிரேக்கர்களுக்குச் சகாயமாக பிரிடன் தளவாடங்களை அனுப்பிக்கொண்டிருக்கிறது. இருந்தபோதிலும், விமானங்கள் குறைவாயிருப்பதால் கிரீஸ் அமெரிக்காவின் உதவியை நாடியிருக்கிறது.

நீட்டிய இடத்தில் கையெழுத்து.—உலகத்திலுள்ள தேசங்களையெல்லாம் மூவரசு உடன்படிக்கையில் சேர்ந்துகொள்ள ஜெர்மனி தம்பட்டம் அடித்துக் கொண்டு போகிறது. ஜெர்மனிக்கு ஏற்கனவே அடிமைப்பட்டுள்ள ஹங்கேரியும், ருமேனியாவும், ஸ்லோவேகியாவும் நீட்டிய இடத்தில் கையெழுத்துப்போட்டார்களே ஒழிய மற்று ஒருவரும் சேரவில்லை. சேர்ந்த நாடுகளின் அந்தஸ்து மிகக் கேவலம். ஜெர்மனியோடு சம உரிமை கிடையாது. ஆனால், ஜெர்மனியின் தலைமையை வகிக்கவேண்டும். இந்த நாடுகளுடைய சொந்தக் காரியங்களுக்கு மட்டும் ஆலோசனைக்குக் கூப்பிடப்படுவார்கள்.

இவைகள் கையெழுத்துப் போட்டதில் விசேஷமொன்றுமில்லை. இவைகள் ஏற்கனவே ஜெர்மனிக்கு அடிமைகள். இதர நடுநிலை நாடுகளை ஏய்த்து, பயமுறுத்தித் தன்னோடு சேர ஜெர்மனி இந்த உபாயத்தைத் தேடியது. பலிக்கவில்லை. பல்கேரியா சேர மறுத்துவிட்டது. யுகோ-ஸ்லோவியாவுக்கு இந்த வலையில் மாட்டிக்கொள்ள இஷ்டமில்லை. துருக்கி உஷாராய், பல்கேரியா, கிரீஸ் டார்டனல்ஸ் எல்லைப்புறமுள்ள தன்னுடைய ஆறு ஜில்லாக்களில் யுத்த—சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டது.

ஜெர்மன் புது உலகில் சேர்த்துக்கொள்ள தென்-ஹாலண்டு, பெல்ஜியன்-பிளாண்டர்ஸ், பிரெஞ்சு-பிளாண்டர்ஸை ஒன்று சேர்த்து ஒரு புதிய பிளெமிஷ் தேசத்தை உண்டாக்க, சிறையிலிருக்கும் பெல்ஜிய அரசன் பெர்லினுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார். ஆனால், இது நடக்கப்போகிற காரியமில்லை. பெல்ஜியத்தில், வாலூன்ஸ் ஜாதியார் 100-க்கு 45 பேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பிரான்ஸோடு சேரமாட்டார்கள்.

விமானப்போர்.—சென்ற வாரத்தில் ஜெர்மன் கேந்திரஸ்தானங்களை 70 தடவை பிரிடிஷ் விமானங்கள் தாக்கின. இதோடு ஜெர்மன் விமான நிலையங்களும் தாக்கப்பட்டன. தாக்கப்பட்ட இடங்களில் 100-க்கு 40 துறைமுகங்களும், கப்பல்களும், 25 தொழிற்சாலைகளும், 19-க்கு மேற்பட்ட எண்ணெய் ஸ்தாபனங்களும், பாக்கி ரயில் நிலயங்களும, ரயில் பாதைகளும்.

ஹாம்பர்க் துறைமுகம் இரண்டு இரவு, பூராவாக, மாலையிலிருந்து உதயம் வரையில் கடுமையாகத் தாக்கப்பட்டது.

வழக்கம்போல் அநேக இடங்கள் தீப்பற்றி எரிந்தன. ப்ளாம், வாஸ் கப்பற் கட்டுத் துறைகளில் 12 வெடி விபத்து நேர்ந்தது. ஹாம்பர்க் ஜில்லா வொன்றில் 1,000 தீ வெடிகள் போடப்பட்டன.

கெல்ஸன் கர்ச்சனிலுள்ள ஷோல்வன் சேர்க்கை எண்ணெய்ச் சாலையில் 1000-க்கு மேற்பட்ட தீக் குண்டுகளும், வெடிகளும் போடப்பட்டன. இந்தச் சாலையில் வருஷத்துக்கு 300,000 டன் எண்ணெய் உற்பத்தி செய்வது வழக்கம். இது அரைசதுர மைல் விஸ்தீரணத்துக்குப் பற்றியெரிந்தது. கெல்ஸென் கர்ச்சனிலுள்ள வேறு இரண்டு எண்ணெய்ச் சுத்திச் சாலைகள் தகர்க்கப்பட்டன. நிலக்கரி சுரங்கங்களுக்குப் போகும் ரயில் பாதையும் பழுதாயிற்று.

மழை, குளிருக்கு அஞ்சாது பிரிடிஷ் விமானங்கள் சென்று லியூனு சேர்க்கை-எண்ணெய்ச்சாலையை எதிர்த்தன. கப்பல்களுக்கு மின்சார யந்திரங்கள் தயாரிக்கும் பெர்லின் (Berlin) யந்திரச்சாலை மேல் குண்டுகள் போடப்பட்டன. நதித் துறை முகமாகிய டூயிஸ்பர்க்-ரூரோர்ட்டை 2,000 அடி உயரத்திலிருந்து தாக்கப்பட்டது. எதிரிகளுடைய சோதனை விளக்குகளுக்கும், சில பீரங்கிகளுக்கும் பிரிடிஷ் விமானங்கள் பயப்படவில்லை. நதித் துறைமுகங்களுக்குள் இது உலகத்தில் முதன்மையானது. இது ரைனையும்-ரூரையும் சேர்க்கும் முக்கிய ஸ்தலம். நார்வேயில் ஸ்டாவென்ஜர் விமான நிலயத்திலிருந்து பிரான்ஸில் லோரியன்ட் கப்பல் நிலயம் வரையில் பல இடங்கள் தாக்கப்பட்டன.

ப்ரமன், கொலோன், டார்ட்மண்டு-எம்ஸ்-கால்வாய் முதலிய இடங்கள் பகல்-காலத்தில் எதிர்க்கப்பட்டன. 1,400 மைலுக்கப்பாலுள்ள ஸ்கோடா யுத்தத் தளவாட உற்பத்திச் சாலைகளைத்தாக்கியது இந்த வாரத்திய விசேஷச் செய்தியாகும்.

இந்தப் படையெடுப்பில் 9 பிரிடிஷ் விமானங்கள் நஷ்டமாயின.

இராக்காலங்களில் பிரிடன்மேல் படையெடுப்பு நிற்கவில்லை. லண்டனை விட்டு கவென்ட்ரீ போன்ற இதரப் பட்டணங்களை ஜெர்மானியர் மிருகத்தனமாய்த் தாக்குகிறார்கள். இதைத் தடுக்க பிரிடிஷ் விமான அதிகாரிகளும், இஞ்ஜினியர்களும் யோசனை செய்துவருகிறார்கள். லோதியன் பிரபு சொல்லுவதைப் பார்த்தால் ஏதோ ஒரு உபாயம் கண்டு பிடிக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் அமுலுக்கு வரும்போலிருக்கிறது.

நவம்பர் 23-ல் டோவருக்கு 20 இதாலிய விமானங்கள் வந்ததில் 7 சுட்டுத் தள்ளப்பட்டு, பாக்கி ஓடிவிட்டன.

கீழ் கண்டிருக்கும் சிறு கதையிலிருந்து இதாலியருக்கும், ஜெர்மானியருக்கும் அந்நியோன்யமில்லையென்று வெளியாகிறது. சில நாட்களுக்குமுன் ஜெர்மன் விமானங்களுக்குத் துணையாக வந்த சில இதாலிய விமானங்கள், பிரிடிஷ்

விமானங்களால் எதிர்க்கப்பட்டு சொல்லிக்கொள்ளாமல் திரும்பி ஓடிவிட்டன. ஜெர்மன் விமானங்கள் சிதறிப்போய் ஊர் வந்து சேர்ந்து நடுச்சண்டையில் ஓடிவந்து ஒளிந்துகொண்டிருந்த இதாலிய விமானிகளைக் கண்டுபிடித்து வாக்கு வாதம் செய்ய, சண்டை வலுத்து, கைகலந்து, ஒருவருக்கொருவர் சுட, சிலர் மாண்டார்கள்.

இந்தியா.—இந்தியாவின் தொழில் முன்னேற்றத்துக்காக செய்யப்போகும் சில முக்கிய ஏற்பாடுகளைப்பற்றி தொழில்-மந்திரி மிஸ்டர் எர்னஸ்ட் பெவின் நவம்பர் 23-ம் தேதி கார்டிவில் பின்வருமாறு எடுத்துரைத்தார் :—

"இந்தியத்தொழிலாளர்கள் சிலர், இங்கிலாந்துக்கு கூட்டிவந்து, வசிப்பதற்கு வசதிகள் செய்துகொடுத்து, வேலை கற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்ய இந்தியா மந்திரியைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். பழகிய பிறகு இங்கிலாந்திலுள்ள தொழிற்சங்க அமைப்பையும் கற்றுக்கொண்டு அவர்கள் திரும்புவார்கள்.

இந்த ஏற்பாடானது இந்தியர்களுக்கு இதுவரையில் கிடையாது. இதில் இருந்து இந்தியத்தொழிலாளிகள் பிரிடிஷ் தொழிலாளிகளுக்குச் சமானமாய்விடு வார்கள். தொழில்-இலாகாவிலிருந்து இவர்கள் பிரிடிஷ் தொழிலாளிகளுக்குச் சரியாய் சம்பளம் பெறுவார்கள். இந்தியாவிலிருக்கும் அவர்களுடைய குடும்பங் களுக்கும் உதவிப்பணம் (அல்லவுன்ஸ்) கொடுக்கப்படும். இதிலிருந்து இந்தியா வுக்கும் இங்கிலாந்துக்கும் புதுக்கூட்டுறவு ஒன்று ஏற்படும்.

இந்தியத் தொழிலாளிகளுக்கு சம்பளங்கள் உயர்த்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஐரோப்பாவில் போட்டி குறைந்து அமைதி ஏற்படும்.

இந்த இந்தியர்களைப்பழக்க, தாராள மனதுள்ள நிபுணர்கள் சிலரை, பிரிடிஷ் தொழிற் சங்கத்திலிருந்து எடுத்துக்கொள்ளுவதாக உத்தேசம்.

பிறகு திருத்தியமைக்காமல், இப்பொழுதே நம்முடைய தொழிற்சங்க முறைகளின்படி இந்தியர்களைப் பழக்கி இந்தியத்தொழில் அபிவிருத்தியை இப் பொழுதே துவக்கவேண்டும்."

நவம்பர் 21-ல் காமன்ஸ்சபையில் மிஸ்டர் ஏமரி இந்தியாவில் யுத்த முயற்சி யைப்பற்றி பேசிய பிரசங்கத்திலிருந்து சில பகுதிகள் கீழே மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன.

"பிரிடன்மேல் படையெடுப்பு நின்று, ஸாம்ராஜ்ய படையெடுப்புத்துவக்கப் பட்டிருக்கிறது. ஸாம்ராஜ்யம் இரண்டுவிதமாய் ஈடுபடும். இங்கிலாந்துக்கு அப்பாலுள்ள ஸாம்ராஜ்ய தேசங்களிலும், கடலிலும் ஏற்படும் சண்டையிலிருந்து தான் வெற்றி முடிவில் வரப்போகிறது. மேலும் ஸாம்ராஜ்யங்களில் தயாரிக்கப் படும் தளவாடங்களைக்கொண்டுதான் வெற்றி வரப்போகிறது.

பிரிடனிலும், விசேஷமாக ஸாம்ராஜ்ய நாடுகளிலும் யந்திர-சாதனத்தால் தான் வெற்றியை அடையவேண்டும். இந்தத் தளவாடங்களை அவசரமாய்ச் செய்ய முடியாது.

இந்தியாவினுடைய யுத்த முயற்சியும் சைன்ய அபிவிருத்தியும், தளவாடங்களைப் பொறுத்து இருக்கிறது.

சமாதான காலத்தில் இந்தியாவில், 160,000 இந்தியத்துருப்புகளும், 50,000 பிரிடிஷ் துருப்புகளுமுண்டு.

இப்பொழுது இந்தியத்துருப்புகளை 50,000 சேர்த்து அதிகப்படுத்தி, பழக்கி, யந்திர தளவாடங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேலும், இப்பொழுது 100,000 பேர்கள் புதிதாகச் சேர்த்துப் பழக்கப் பட்டு வருகிறார்கள்.

இவர்களுக்கு மேலதிகாரிகள் வேண்டியிருப்பதுடன் மற்ற சாதனங்களும் வேண்டியிருக்கின்றன. அதற்காக இந்தியர்களும், பிரிடிஷ் மக்களும் பொறுக் கப்பட்டு வருகிறார்கள்.

ராணுவங்களில் பல பாகங்களில் பழகவும், புதிய யந்திரங்களைக் கையாடவும் அநேக பள்ளிக்கூடங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியத் துருப்புகளை ஏற்றிச்செல்ல ஏற்கனவே 5,000 லாரிகளிருந்தன. இவைகள் இப்பொழுது 32,000 மாக அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அடுத்த வருஷம் 64,000 மாக ஆக்கப்படும்.

வாலிப இந்தியர்களுக்கு விமானிகளாக ஆசையிருக்கிறது. அவர்களுடைய புத்தி நுட்பமாயிருக்கிறது; கைகள் சுலபமாய் வேலையைக்கற்றுக் கொள்ளு கின்றன.

பிரிடிஷ்-விமானப்படையில் ஏற்கனவே சில இந்தியர்கள் அமர்ந்திருக் கிறார்கள்; சிலர் இப்பொழுது இங்கிலாந்துக்கு வந்து பயிற்சியை முடித்துக் கொள்ளுகிறார்கள்.

முடிவில் இந்தியக் கப்பற்படையைப்பற்றிப் பேசுவோம். இவைகள் இடை விடாது இந்திய கடற்கரைகளையும் துறைமுகங்களையும் காவல் காத்துக்கொண்டு, வியாபாரக்கப்பல்களுக்குத் துணைபோய்க்கொண்டிருக்கின்றன. இவைகளுடைய திறமை வழக்கம்போல் அதிகம்.

"பதான்" என்ற பிரிடிஷ் கப்பலை எதிரி மூழ்கடித்தபோது பெரிய கஷ்டம் ஏற்பட்டது. அப்பொழுது மனங்கலங்காது உத்திரவுக்குக் கீழ்ப்படிந்து இந்தியர்கள் நடந்துகொண்டார்கள்.

யுத்தம் துவக்கிய காலமுதற்கொண்டு இடைவிடாது துருப்புகளும், தளவாடங்களும் இந்தியக் கப்பல் இலாகாவினுடையவும், பிரிடிஷ் கப்பல் இலாகாவினுடையவும் துணையைக்கொண்டு, நடு கிழ் நாடுகளுக்குப்போயிருக் கின்றன. சேதம் கொஞ்சமேனும் கிடையாது. முகம்மதியர்கள் யாத்திரை செய்யப் பயமில்லாது செங்கடல் வழிசெல்ல இந்தியக்கப்பல் இலாகா காவல் பார்த்துக்கொண்டிருக்கிறது.

சாதாரண துப்பாக்கிகள், யந்திரத் துப்பாக்கிகள், 6-இஞ்சு பீரங்கிகள், தோட்டாக்கள், பலவித வெடிமருந்துகள், குதிரை-ஜேனம், ஜோடு, கூடாரம்,

போர்வை, உடுப்பு மற்றப் பலவகை சாதனங்களும் இந்தியாவில் ஏற்கனவே செய்யப்பட்டு வருகின்றன.

இக்காலத்திய யுத்தத் தளவாடங்களில் 40,000 வகைளில், பாதிக்குமேல், இப்பொழுது இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன. கவசத்தகடுகள் செய்ய ஏற்பாடாய்க்கொண்டிருக்கிறது. அடுத்த வருஷத்தில் 3,000 வண்டிகளுக்கு இந்தியாவிலேயே கவசங்கள் போடப்படும்.

தங்களுடைய விச்வாசத்தை இந்தியர்கள் திரவிய சகாயத்தால் காண்பித்திருக்கிறார்கள். வைஸிராய் யுத்த நிதிக்கும், மற்ற நிதிகளுக்கும், அரசர்கள் முதற்கொண்டு, சிறு வேலைக்காரர்கள்வரை, லக்ஷரூபாய் முதற்கொண்டு ஒரு அணா வரை பொருள் உதவி செய்திருக்கிறார்கள்.

சென்ற மூன்று வாரங்களாக, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென் ஆபிரிக்கா-யூனியன், ரொடீஷ்யா, கீழ்-ஆபிரிக்காக்குடியேற்ற நாடுகள், பாலஸ்தீனம், பர்மா, மலேயா பிரதிநிதிகள், ஸர் அலெக்ஸாண்டர் ராஜர்-மிஷனோடு கலந்துகொண்டு ஆலோசனைகள் செய்து வருகிறார்கள்.

தங்கள் சொந்தப் பாதுகாப்புக்கும், பொதுப் பாதுகாப்புக்கும் தளவாடங்களைக் கூட்டுறவால் அதிகப்படுத்தி, அதிலிருந்து சைன்யங்களை அதிகப்படுத்துவதே இவர்கள் சர்ச்சையின் நோக்கம்.

அமேரிக்கா.—அமெரிக்காவுக்கு விரோதமான சூழ்ச்சிகளை ஆராய்ச்சி செய்ய நியமிக்கப்பட்ட கம்மிட்டியாரின் தஸ்தாவேஜிவெளியானதிலிருந்து ஜெர்மானியர்கள் பிரசாரம், வேவு முதலிய காரியங்களோடு நில்லாது அமெரிக்க வியாபாரம் முதலிய பொருளாதாரங்களையும் கெடுக்கப்பார்த்ததாயும் தெரிகிறது.

யுனைடட் ஸடேட்ஸுக்கு லோதியன் பிரபு திரும்பிவிட்டார். அவர் இங்கிலாந்துக்குப் பொருளுதவியும், வியாபாரக் கப்பல்களும் அமெரிக்காவைக் கொடுக்கச் சொல்லுவரென்று தெரிகிறது.

ஸ்பெயின்.—ஸ்பானிஷ் மொராகோ சம்ரக்ஷணநாடோடு சேர்த்துக்கொள்ளப்பட்ட டாங்கியரில் சட்ட—பூர்வ ஆக்ஷி நிர்மிக்கப்பட்டிருக்கிறது.

தூர கிழக்குப் பிரதேசம்.—ஜப்பானியர் பௌபிங்கைப் பிடித்துக்கொண்டார்கள். ஆனால் பீபிங்கை விட்டுவிட நேரிட்டது.

ஜப்பான் சண்டைக்கப்பல்களும் தளவாடக்கப்பல்களும் ஸைகான் நதிக்கப்பால் நிறுத்தப்பட்டிருக்கின்றன; ஸாகானுக்குள் வரவேண்டுமென்கிறார்கள்.

கம்போடியாவிலுள்ள பட்டம் பாங்குக்கு தென்மேற்கில் 62 மைலில் சனிக்கிழமை இரவு இந்து சைனாவில் தாய்லாண்டு படையெடுத்தது. ஆனால் எதிரிகள் எதிர்த்ததால் தடுக்கப்பட்டார்கள்.

ஆபிரிக்கா.—நவம்பர் 24-ம் தேதியன்று பிரிடிஷ் துருப்புக்கள் அபிஸீனியாவுக்குள் நுழைந்து மெடெம்மாவைப் பிடித்துக்கொண்டன. காலாபாதுக்குக் கிழக்கே பிரிடிஷ் துருப்புக்கள் எதிரியை எதிர்த்து இம்சை செய்துகொண்டேயிருக்கின்றன.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ் கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
18—11—40 (திங்கட்கிழமை).			
	ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	இரவில்.—எண்ணெய் உற்பத்தி ஆலை.—லூனா (Leuna).	......	பல இடங்களில் பெருந்தீ பிடித்தது.
	காவல் கார்த்தல்.—வடகடல் (North sea).	......	1 பெரிய விமானமும் ஒரு கடல் விமானமும் நாசம்.
	இதாலிய டோடிகனீஸ் (Dodecanese).		
	ஒரு தீவு.—டோடிகனீஸ் (Dodecanese) தீவுகள்.	......	......
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	டொப்ருக் (Tobruk), பார்டியா (Bardia), ஸோலம் (Sollum).	......	......
	அரசாங்க காரியாலயங்கள்.—இதாலிய ஸோமாலி லாண்டி (Somaliland)-யுள்ள பார்டிரா (Bardera).	......	......
19—11—40. (செவ்வாய்க்கிழமை).			
	ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	வேடிமருந்துக் கிடங்குகள், இன்னும் மற்ற ராணுவ முக்யமுள்ள இடங்கள்.—பெர்லினி (Berlin)-ன் மத்யபாகம்.	......	பல இடங்களில் ராணுவ முக்யமான சேதங்கள் ஏற்பட்டன.
	கப்பல் கட்டுமிடங்கள், கப்பல் நிற்குமிடங்கள்.—கீல் (Kiel), ஹாம்பர்க் (Hamburg), ப்ரமர்ஹாவன் (Bremerhaven),	......	பல இடங்களில் தீயும், வெடிச் சத்தங்களும் கிளம்பின.
	எண்ணெய் உற்பத்தி ஆலைகள்.—கெல்ஸன் கர்ச்சன் (Gelsenkirchen), ஹாம்பர்க் (Hamburg).	......	தீப்பிடித்தன.
	மின்சார உற்பத்தி ஆலை.—ஹாம்பார்ன் (Hamborn).	......	......

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
19—11—40. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.		
	ஸ்கோடா (Skoda), ராணுவ தளவாடங்கள் உற்பத்திசாலை.—பொஹிமியா (Bohemia)-விலுள்ள பில்ஸென் (Pilsen).	......	படுசேதத்திற்குள்ளாயிற்று.
	உள்நாட்டுத் துறைமுகம்.-டியூஸ்பர்க் ரூரார்ட் (Duisburg-Ruhrort).	......	அதிகச் சேதம்.
	ரயில்வே ஜங்ஷன்.—ப்ரமன் (Bremen), பெர்லின் (Berlin).	......	உபயோகப்படுத்த முடியாமல்போயிற்று
	கடற்படை நிலயம்.—லோரியன்ட் (Lorient).	......	சேதமாயிற்று.
	துறைமுகம்.—பார்ப்ளூர் (Barfluer).	3 விமானங்கள்.	......
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	விமான யுத்தம்.—மேற்குப் பாலைவனம் (Western Desert).	5 விமானங்கள்.	1 விமானம்.
	அல்பேனியா (Albania).		
	கிரேக்க முன்னணிப்படை.	9 விமானங்கள்.	நஷ்டமில்லை.
20—11—40 (புதன்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	கப்பல்கள், சாமான் கிட்டங்கிகள், ராணுவ முக்கியமான இடங்கள்.—உள்நாட்டுத் துறைமுகமான டியூஸ்பர்க் ரூரார்ட் Duisburg-Ruhrort).	......	தீயும் வெடிச்சத்தங்களும் கிளம்பின. பலத்தசேதம்.
	துறைமுகங்கள்.—லோரியன்ட் (Lorient), செர்பரோ (Cherbourg), டன்கர்க் (Dunkirk), ஆஸ்டெண்ட் (Ostend).	1 விமானம்.	அதிகச்சேதம்.
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	விமான யுத்தம்.—கிழக்கு லிபியா (Libya).	10 விமானங்கள்.	நஷ்டமில்லை.
	இதாலிய துறைமுகங்கள்.—எரிட்ரீயா (Eritrea)விலுள்ள அஸாப் (Assab).	......	......

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
20—11—40.	(புதன்கிழமை)—தொடர்ச்சி.		
	அல்பேனியா (Albania).		
	விமான நிலயங்கள்.—டிரானு (Tirana), அல்பேனியா (Albania)வில் மற்ற இடங்கள்.	......	பலத்தசேதம்.
	துறைமுகங்கள்.—டுராஸோ (Durazzo).	......	......
	இதாலி (Italy).		
	டாராண்டோ (Taranto), இன்னும் இதர துறைமுகங்கள்.	......	படுசேதத்திற்குள்ளாயின.
21—11—40.	(வியாழக்கிழமை).		
	ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	பகலில்.—விமான நிலயம்—ஸ்டாவாங்கர் (Stavanger).	......	......
	இரவில்.—காலநிலை சரியாயில்லாததால் விமானப்படையெடுப்பு இல்லை.	......	......
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	விமான நிலயக் கட்டடங்கள், தரையிலிருக்தும் விமானங்கள்.—பென்னினு(Bennina)	......	கட்டடங்களின் மேல் குண்டுகள் வீழ்ந்தன. விமானங்கள் நாசமாயின.
	கப்பல்கள்.—பென்காஸி (Benhazi)	......	சேதமாயின.
	அபிஸீனியா (Abyssinia)விலுள்ள கூரா (Gura), எரிடிரியா (Eritrea) விலுள்ள மஸாவா (Massawa), அஸ்மாரா (Asmara).	நஷ்டமில்லை.	
	அல்பேனியா (Albania).		
	பின்னடைந்து ஓடும் விரோதி சைன்யங்கள்.—அல்பேனியா (Albania).	......	படு சேதத்திற்கு உள்ளாயின.
	தெபேலின் (Tepelene).	......	......
	வேவுபார்த்தல்.—விரோதி நாவீகள்.	......	முக்கியமான சமாசாரங்கள் தெரிந்தன.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
22—11—40. (வெள்ளிக்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	பகலில்.—விமான நிலயம்—ஷீபால் (Schipol)	......	......
	ஒரு தொழிற்சாலை.—ரூரி (Ruhr)-லுள்ள ஸோலிங்கன் (Solingen).	......	......
	இரவில்.—விமான நிலயம்—மெரிக்னக் (Merignac)—போர்டோவுக்கருகில்—இந்த விமான நிலயத்திலிருந்துதான் ஜெர்மன் விமானங்கள் அட்லாண்டிக் (Atlantic) மகாசமுத்திரத்தில்வரும் பிரிடிஷ் கப்பல்களைத் தாக்கிக்கொண்டிருக்கின்றன.	......	சில கட்டடங்களும் தரையிலிருக்கும் விமானங்களும் சேதமாயின. விமானங்கள் இருக்கும் இடங்களும் சேதமாயின.
	எண்ணெய்த் தொட்டிகள்.—டார்ட்மண்ட் (Dortmund), டூயிபர்க் (Duisburg).		கொழுந்து விட்டு எரிந்தன.
	ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் துறைமுகங்கள்.—லோரியண்ட் (Lorient), செர்பரோ (Cherbourg), லஹார் (Le Havre), ஆஸ்டெண்ட் (Ostend), ப்ளஷிங் (Flushing).	1 விமானம்	எங்கும் அதிகச் சேதம்.
	இதாலி (Italy).		
	துறைமுகம், ரயில்வே ஸ்டேஷன், எண்ணெய் சுத்தி செய்யுமிடங்கள்.—பாரி (Bari).		பெருந்தீயும் வெடிச் சத்தங்களும் கிளம்பின.
	துறைமுகம்.—டாரண்டோ (Taranto).		
	அல்பேனியா (Albania).		
	போக்குவரத்து சாதனங்கள், பின்னடையும் இதாலிய துருப்புகள்.—போகிராடட் (Pogradet)		அதிகச்சேதம் விளைந்தது.
	ராணுவ சாதனங்கள்.—ஆர்கைரோகாஸ்ட்ரோ (Argyrokastro).		பலத்த சேதம்.
	வேவுபார்த்தல்.—கிரேக்கக் கடற்கரை முழுவதும்.		

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
22—11—40.	(வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.		
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	ராணுவங்கள் வசிக்குமிடம்.—லிபியா (Libya)வில் டெர்ணு (Derna).		
	முக்கியமான இடம்.—லிபியா (Libya)வில் பார்டியா (Bardia).		
23—11—40.	(சனிக்கிழமை).		
	ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	பகலில்.—கம்பியில்லாத் தந்தி ஆபீஸ்.—நார்வே (Norway) கடற்கரையிலுள்ள விகரோ (Vikero)	2 விமானங்கள்.	
	இரவில்.—புலிட்ஸர் ஸ்ட்ராஸ் (Pulitzer-strasse), லேர்டர் (Lehrter) சாமான் கிடங்குகள், பாட்ஸ்டாமர் (Potsdamer), அன்ஹால்டர் (Anhalter) ஸ்டேஷன்கள், பெர்லின் (Berlin).	......	தகர்க்கப்பட்டது. பல இடங்களில் தீப்பிடித்தது. படு சேதம் உண்டாயிற்று.
	சாமான் கிடங்குகள்.	......	தீப்பிடித்தன.
	ரயில்வே ஸ்டேஷன்கள் லீப்ஸிக் (Leipzig).	......	......
	உள்நாட்டுத் துறைமுகம்—டூயிபர்க்ரூரார்ட் (Duisburg) (Ruhrort)	......	பலத்த சேதம்.
	துறைமுகத்திலுள்ள முக்கியமான இடங்கள், இயந்திர ஸாதனங்கள்.—புலாயின் (Boulogne).	......	......
	ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்—டார்ட்மண்ட் (Dortmund).	......	......
	குருப்ஸ் (Krupps) தொழிற்சாலை—எஸ்ஸன் (Essen).	......	அதிகச் சேதம்.
	ஒரு தொழிற்சாலை.—காஸ்ட்ரோ (Castro) ராக்ஸல் (Rauxel).	......	......
	மின்சார உற்பத்திச்சாலை.—ப்ரஸ்ட் (Brest)	......	நாசமாயிற்று.
	ஸப்மரைன் (Submarine) நிலயம்.—லோரியண்ட் (Lorient).	......	...... ஒரே தீ ஜ்வாலை,

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும் படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
23—11—40. (சனிக்கிழமை)—தொடர்ச்சி.			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.		
	ஜெர்மனி படையெடுக்க உபயோகப்படும் துறைமுகங்கள், வெகுதூரம் சுடக்கூடிய பீரங்கிகள் பொருத்திவைக்கப்பட்டிருக்கும் ஸ்தலங்கள்.—*பிரஞ்சுக் கடற்கரை*		*தகர்க்கப்பட்டன.*
	பல விரோதி விமான நிலயங்கள்.		
	இதாலி (Italy).		
	ராயல் ஆர்ஸினல் (Royal Arsenal), பியட் (Fiat) தொழிற்சாலை, *டூரின்* (Turin)		
	ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—*லிகூரியா* (Liguria).		
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	விமான நிலயக் கட்டடங்கள்.—*எலாடன்* (Eladen).	......	*தீப்பிடித்தன.*
	விமான நிலயங்கள்.—*மெனஸ்டர்* (Menastir), *காம்புட்* (Gambut), *கஸாலா* (Gazala).	......	*சேதமாயின.*
	ரயில்வே பாதை.—*அகோர்தாத்* (Agordat)	......	*சேதமாயிற்று.*
	சாமான் கிடங்குகள்.—*கூரா* (Gura).	......	*தீப்பிடித்தன.*
	கோட்டை.—*கஸாலா* (Kassala).	......	......
	வேவு பார்த்தல்.—*விரோதியின் பிரதேசங்கள்.*	*நஷ்டமில்லை.*	
	அல்பேனியா (Albania).		
	முக்கியமான ரோட் சந்திப்பு.—*எல்பாஸான்* (Elbasan).	......	......
24—11—40 (ஞாயிற்றுக்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	பகலில்.—விமான நிலயம்—*நார்வே* (Norway) *யிலிருக்கும் கிரிஸ்டியன் ஸண்ட்* (Christiansund).	......	*பலத்த சேதம்.*

தேதி. பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
24—11—40. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.		
ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.		
துறைமுகம்.—ஹூக் ஆப் ஹாலந்து (Hook of Holland).	......	......
கப்பல் நிற்குமிடங்கள்.—புலாயின் (Boulogne).	......	சேதமாயின.
இரவில்.—கப்பல் கட்டுமிடங்கள், தொழிற் சாலை—ஹாம்பர்க் (Hamburg).	......	பல இடங்களில் தீயும், வெடிச் சத்தங்களும் கிளம் பின.
காஸ் (Gas) தொழிற்சாலை.—ஆல்டோனு (Altona).	......	தீப்பிடித்தது.
கப்பல் நிற்குமிடங்கள்.—வில்ஹெல்ம் ஷாவன் (Wilhelmshaven).	......	......
ஒரு ரஸாயனத் தொழிற்சாலை.—வில் ஹெல்ம்ஸ்பர்க் (Wilhelmsburg).	......	தீப்பிடித்தது.
துறைமுகம்.—புலாயின் (Boulogne).	......	......
கப்பல் நிற்குமிடம்.—ஹெல்டர் (Helder).	......	......
விமானஞ் சுடும் பீரங்கிகள், ஆகாய விளக்குகள், விரோதி விமான நிலயங் கள்.	1 விமானம்	தகர்க்கப்பட்டன.
இதாலிய ஆபிரிக்கா (Africa).		
சைன்யங்கள் வசிக்குமிடம்.—டெர்ணு (Derna), அப்போலோனியா (Ap- polonia).	......	சைன்யங்கள் வசிக்கு மிடம் சேதமாயிற்று. ஒரு விமானம்.
ராணுவக் கட்டடங்கள்.—டொப்ருக் (Tob- ruk). பார்டியா (Bardia).	நஷ்டமில்லை.	கட்டடங்கள் சேத மாயின.
கப்பல்கள்.—அஸாப் (Assab) துறைமுகம்	......	ஒரு பெரிய தீ கிளம் பியது.
சைன்யங்கள் வசிக்குமிடங்கள்.— அஸோ ஸா (Asosa).	......	தீப்பிடித்தன.
சைன்யங்கள் தங்குமிடம்.—ஸாலீயா (Saleiya),	......	......

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ் கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
24—11—40.	(ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.		
	இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.		
	கூரா (Gura).	......	......
	வேவு பார்த்தல்.—விரோதியின் பிரதேசங்கள்.	......	......
	அல்பேனியா (Albania).		
	கப்பல்கள், துறைமுகக் கட்டடங்கள்.—டுராஸோ (Durazzo).	......	ஒரு பெரிய கப்பலில் குண்டு விழுந்தது, சிறியகப்பல்கள் தீக்கிரையாயின.
	இதாலிய ஒத்தாசை சைன்யங்கள்.—அல்பேனியா (Albania).	......	எங்கும் ஒரே கனோபரம்.
	ராணுவத்தளவாட கிட்டங்கிகள், பல மோட்டார் வண்டிகள்.—டெப்பலீன் (Teppelene) பிரதேசம்.	......	......

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்
19—11—40.	(செவ்வாய்க்கிழமை).		
	பிரிடன் (Britain)		
	இரவில்.—மிட்லண்ட்ஸ் (Midlands), லண்டன் (London) பிரதேசம், ஸ்காத்லாந்தி (Scotland)-ல் ஒரு கிராமம், இன்னும் இங்கிலாந்தி (England)-ல் சில இடங்கள்.	...... 5 விமானங்கள்.	பல கட்டடங்களுக்குச் சேதம். பலருக்குக்காயம். சொற்பச்சேதம். சிலருக்குக்காயம். நஷ்டமில்லை.
	கிரீஸ் (Greece)		
	ஸாமாஸ் (Samos) தீவு.	......	......

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
20—11—40. (புதன்கிழமை).			
	பிரிடன் (Britain)		
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம் மிட்லண்ட்ஸ் (Midlands), தெற்கு இங்கிலாந்தி(England)ல் அங்குமிங்குமாக சில இடங்கள், தெற்கு வேல்ஸி (Wales)ல் ஒரு இடம்.	...... 1 விமானம்	சிலருக்குக்காயம். சிலர்கொல்லப் பட்டனர். சேதம் வெகு சொற்பம். நஷ்டமில்லே.
	கிரீஸ் (Greece).		
	விமான நடவடிக்கை அதிகமில்லே.	......	......
21—11—40 (வியாழக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	இரவில்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia)-வில் பல இடங்கள், தெற்கு இங்கிலாந்தி (England)-ல் அங்குமிங்குமாக சில இடங்கள்.	...... 1 விமானம்.	சேதமில்லே. ஒருவருக்கும் காயம் படவில்லே. 1 விமானம்.
	கிரீஸ் (Greece)		
	இன்று விமானப் படையெடுப்பு இல்லே.	......	......
22—11—40. (வெள்ளிக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—(மிகவும் சொற்பமாகத்தான் படையெடுப்பு இருந்தது).	......	......
	லண்டன் (London) பிரதேசம் ஸர்ரே (Surrey), ஹோம் கவுண்டீஸ் (Home counties).	2 விமானங்கள்.	நஷ்டமில்லே.
	இரவில்.—மேற்கு மிட்லாண்ட்ஸி (Midlands)-ல் இரண்டு பட்டணங்கள், லண்டன் (London) மர்ஸிஸயிட் (Merseyside).	......	சில கட்டடங்கள் சேதமாயின.

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
22—11—40. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.			
	கிரீஸ் (Greece)		
	டோடிகனீஸ் (Dodecanese) தீவுகளிலுள்ள லீராஸ் (Leros) தீவு.	......	......
	பிரிடிஷ் ஆபிரிக்கா (Africa).		
	ஸூடான் (Sudan) துறைமுகம், மால்டா (Malta).		சேதமுமில்லை, ஒருவருக்கும் காயமுமில்லை. 1 விமானம் சுட்டு வீழ்த்தப் பட்டது.
23—11—40 (சனிக்கிழமை).			
	பிரிடன் (Britain)		
	பகலில்.—டோவர் (Dover) பிரதேசம், தெற்கு இங்கிலாந்து (England), தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரத்தில் ஒரு பட்டணம்.	7 இதாலிய விமானங்கள் 4 ஜெர்மன் விமானங்கள்.	காயம் பட்டவர்கள் மிகச் சொற்பம். நஷ்டமேயில்லை.
	இரவில்.—மேற்கு மிட்லாண்ட்ஸி (Midlands)-ல் ஒரு பட்டணம், தெற்கு இங்கிலாந்தி (England)-ல் சில சில இடங்கள்.	......	சில கட்டடங்களுக்கும் வீடுகளுக்கும் சேதம்.
	கிரீஸ் (Greece)		
	ஸாமாஸி (Somos)-லுள்ள டிகானி (Tigani), கார்ப்பூ (Corfu).	......	சேதமே இல்லை.
24—11—40. (ஞாயிற்றுக்கிழமை).			
	பிரிடன் (Britain)		
	பகலில்.—இங்கிலீஷ் (English) கால்வாய், கென்டி (Kent)ல் பல இடங்கள், சில தெற்குக் கடற்கரைப் பட்டணங்கள்.	......	காயம் பட்டவர்களும் சேதமும் மிகச் சொற்பம்.
	இரவில்.—ஒரு மேற்கு இங்கிலாந்து (England) பட்டணம், தென்மேற்கு இங்கிலாந்தி (England)-ல் ஒரு பட்டணம்.	...... 3 விமானங்கள்	சொற்பச்சேதம். நஷ்டமில்லை.

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும் படையெடுப்பால் விளைந்த சேதமும்.
24—11—40. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.			
	பிரிடன் (Britain)—தொடர்ச்சி.		
	லண்டன்.—(London), ஹோம் கவுண்டீஸ் (Home Counties).	......	சிலருக்குக்காயம்.
	பிரிடிஷ் ஆபிரிக்கா (Africa).		
	மால்டா (Malta,) அலெக்ஸாண்டிரியா (Alexandria.)	......	சில பொதுஜனங்கள் கொல்லப்பட்டனர்.
25—11—40. (திங்கட்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—லண்டன் (London) பிரதேசம், தென்கிழக்கு இங்கிலாந்தி (England)-ல் மூன்று இடங்கள்.	......	மிகச்சொற்பசேதம்.
	இரவில்.-மேற்கு இங்கிலாந்தி(England)-ல் ஒரு பட்டணம.	1 விமானம்.	நஷ்டமில்லை.
	அல்பேனியா (Albania)-வில் கிரேக்க சைன்யங்களும் கிரீஸும் (Greece).		
	கிரேக்க சைன்யங்கள்.—எபிரஸ்(Epirus) பிரதேசம்.	......	......
	கிராமங்கள், பட்டணங்கள்.——கார்ப்யூ (Corfu.)		

அனுபந்தம் I.

லாபமும் நஷ்டமும்.

ஒரு வருஷயுத்தத்திற்குப் பிறகு கடற்படையின் நிலைமை.

(பிரான்ஸிஸ். மாக்மர்ட்ரி எழுதுகிறார்.)

இப்பொழுது யுத்தம் ஒரு வருஷம் நடந்திருக்கிறது. இதுவரை பதியப்பெற்றிருக்கிற அளவுக்கு நம் கடற்படை நஷ்டமும், எதிரிக்கு கடலில் நேர்ந்த நஷ்டங்களும் எவ்வளவு என்று கணக்கிட்டால் விஷயம் தெரியும்.

1914—15ஆங்கிலங்களோடு ஒப்பிட்டால் இந்த நஷ்டங்களில் சிறிய கலங்களுடைய நஷ்டம் ஜாஸ்தியாகவும், பெரிய கப்பல்களுடைய நஷ்டம் குறைவாகவும் இருக்கிறது. இதற்கு இரண்டு காரணங்களுள, ஒன்று பிரிடிஷ், ஜெர்மானியக் கடற்படைகளில், முக்கியமாக ஜெர்மானியக் கடற்படையில் 1914-ம் ஆண்டைக் காட்டிலும் இப்பொழுது பெரிய கப்பல்களின் எண்ணிக்கை குறைவாகவேயிருக்கின்றது. மேலும் நமக்கும் எதிரிக்கும் கப்பல் பலத்திலுள்ள வித்தியாசம் எதிரிக்கு வெகு பாதகமாக இருக்கக்கூடிய அளவுக்கு இருப்பதால் ஒரு வியூஹ யுத்தத்தில் நமக்கு ஸமதையாக நின்று யுத்தம் செய்ய எதிரி நினைக்கவே முடியாது. மற்றொரு காரணம் என்னவென்றால் இந்த யுத்தத்திலும் சென்ற யுத்தத்தில் பிற்பட்ட பாகத்தில் போலவே யுத்த நடவடிக்கைகளின் போக்கு சிறிய கப்பல்களின் சண்டையை ஒட்டியதாகவேயிருக்கிறது.

அட்டவணையில் பதிந்து பார்த்தால் நஷ்டங்களின் எண்ணிக்கை நன்றாக விளங்கும் :—

(A) பிரிடிஷ்.

வகுப்பு.	1914 ஆகஸ்டு முதல் 1915 ஆகஸ்டு வரை.		1939 ஸெப்டம்பர் முதல் 1940 ஸெப்டம்பர் வரை.	
	எண்ணிக்கை.	டன்கள்.	எண்ணிக்கை.	டன்கள்.
யுத்தக் கப்பல்கள் ...	8	1,05,885	1	29,150
விமானம் தாங்கிகள் ...	1	5,600	2	45,000
ஸஞ்சாரிகள் (Cruisers) விமான எதிர்ப்புக் கப்பல்கள்	9	75,665	3	18,020
நாசகாரிகள் ...	6	3,422	30	35,980
நீர்மூழ்கிகள் ...	9	5,040	14	14,829
துப்பாக்கிப் படகுகள் சாரண கப்பல்கள் சுரங்க வாரிகள்	2	1,620	5	3,646
ஆயுதம் கொண்ட வியாபார ஸஞ்சாரிகள்	4	33,593*	6	98,134*

*ஸாமான் வகையராவோடு மொத்தபாரம்.

(B) ஜெர்மனி.

யுத்தக் கப்பல்கள் ...	...	...	1	10,000
ஸஞ்சாரிகள் ...	16	96,700	4	28,000
நாசகாரிகள் ...	15	7,654	11	16,805
நீர்மூழ்கிகள் ...	17	8,545	70?	?
துப்பாக்கிப் படகுகள் வகையரா.	8	7,480	3?	1,575?
தோணி வெடிப் படகுகள் ...	3	350	7?	400?
ஆயுதங்கொண்ட வியாபார ஸஞ்சாரிகள்	7	91,426*	இன்னும் ஒன்றுமில்லை.	

* ஸாமான் வகையராவோடு மொத்த பாரம்.

யுத்தம் ஆரம்பித்தபோது, பிரிடன் கைவசத்தில் 15 யுத்தக்கப்பல்கள், யுத்த ஸஞ்சாரிகள், 6 விமானம் தாங்கிகள், 58 ஸஞ்சாரிகள், 6 விமான எதிர்ப்புக் கப்பல்கள் (ஸஞ்சாரிகளாகயிருந்து எல்லாம் மாற்றப்பட்டவை) 185 நாசகாரிகள், 58 நீர்மூழ்கிகள் இருந்தன. ஜெர்மனியிடமோ 5 யுத்தக் கப்பல்கள், 8 ஸஞ்சாரிகள், 22 நாசகாரிகள், சுமார் 70 நீர்மூழ்கிகள்தான் இருந்தன.

இப்படியாக நூற்றுக்குள்ள ஈவுப்படி கணக்கிட்டால் நம்மைக் காட்டிலும் எதிரிக்கு நஷ்டங்கள் வெகு அதிகமென்றுதெரியும். மேலும் பிரிடிஷ் சாலைகளில் கட்டப்படும் அல்லது பூர்த்தி செய்யப்படும் புதிய கப்பல்கள் தற்பொழுது ஜெர்மனியில் கைவசமுள்ள கப்பல்களைக் காட்டிலும் அதிகமானவை என்பதை நாம் ஞாபகம் வைத்துக்கொள்ளவேணும்.

இப்பொழுது நடந்திருக்கிற வரை, யுத்தத்தில் இத்தாலியின் பாகமும் தீர்மானமாக அதற்கு நஷ்டமாகவே இருந்து வந்திருக்கிறது. அத்தேசம் ஒரு ஸஞ்சாரியையும் நான்கு நாசகாரிகளையும், சுமார் 16 நீர்மூழ்கிகளையும் இன்னும் சில்லரைகளையும் இழந்திருக்கிறது. அதற்கு எதிரியாக ஒப்பிடக்கூடிய நஷ்டம் நமக்கு அதனால் இழைக்கமுடியவில்லை. (மேற்சொன்ன இதாலிய நஷ்டமும் ஸெப்டம்பர்ம௴ வரை கணக்கிட்டது. பின்னால் நடந்த நஷ்டம் முக்கியமாக இந்த நவம்பர்ம௴ டாரண்டோ வளைகுடாவில் நடந்த பெரிய கடற்யுத்தத்தில் இதாலியிழந்த லிடோரியோ வகுப்பு யுத்தக் கப்பல்களையும் (35,000 டன்கள்), கவூர் வகுப்பைச்சேர்ந்த (25,000 டன்கள்) யுத்தக் கப்பல்களையும் சேர்த்து கணக்கிடவில்லை). இதாலியை எதிர்த்த நடவடிக்கைகளில் இங்கிலாந்துக்கு ஏற்பட்ட நஷ்டம் ஒரு ஸஞ்சாரி, ஒரு சாரணகலம், மூன்று நீர்மூழ்கிகள். இவைகள் மேற்கண்ட அட்டவணையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

புள்ளி பார்த்தால், பதினாயிரம் டன் நிறையுள்ள "அட்மிரல் கிராப்ஸ்பீ" என்ற ஜெர்மன் கப்பலைவிட, 29,150 டன் நிறையுள்ள "ராயல் ஓக்" என்ற நம் கப்பல் மூழ்கினது ஜாஸ்தியானதென்று சொல்லவேண்டியது நியாயமே. ஆயினும் பிரிடிஷ் முதல்தர கப்பற்படையின் பலத்தில் பின்சொன்ன கப்பல் 100-க்கு 6⅔ விகிதம்தான் ஆகக்கூடியதென்பதையும், ஜெர்மானிய மொத்தத்தில் முன் சொன்ன கப்பல் 100-க்கு 20 விகிதமுள்ளதென்பதையும் நோக்குங்கால், நம் நஷ்டம் அவ்வளவு பெரியதல்ல.

மேலும் பிரிடிஷ் விமானம் தாங்கிகளான "கரேஜியஸ்," "குளோரீயஸ்" என்பவைகளின் நஷ்டத்துக்குப் பிரதியாக எதிரிபக்கம் யாதொன்றும் ஏற்பட வில்லை என்ற ஒரு விஷயம் இருக்கிறது. ஆனால் ஜெர்மனியிடம் யுத்தம் துவங்கும் காலத்தில் இந்த வகுப்பில் யாதொரு கப்பல்களும் கிடையாது. ஒருக்கால் இப்பால் "கிராப் ஜெப்பலின்" என்ற கப்பலை இதற்காக எடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் பிரிடிஷாருக்கு "இல்லஸ்டிரியஸ்," "பார்மிடபிள்," "இண்டாமிடபிள்," "விக்டோரியஸ்" என்ற நான்கு விமானம் தாங்கிகள்கட்டி முடிவதற்கு திட்டமாயிருக்கின்றன (அவைகளில் சில கட்டி முடிக்கப்பெற்று, "இல்லஸ்ட்ரியஸ்" என்ற விமானம் தாங்கி இம்மாதம் டாரண்டோ துறைமுகச் சண்டையில் கலந்து கீர்த்திபெற்றிருக்கிறது).

சுரங்கம் வாருவது, நீர்மூழ்கிகளை எதிர்க்கச்சுற்றிவருவது முதலிய வேலை களைச் செய்து வரும் வலை வீசுக்கப்பல்கள் (trawlers) போன்ற சிறிய கப்பல் களைப்பற்றிச் சொல்லவில்லை. யுத்தம் துவங்கினதிலிருந்து மொத்தம் 59 வலை வீசுக்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. சென்ற யுத்தத்தில் நேர்ந்த நஷ்டத்தில் அது சுமார் ஐந்தில் ஒரு பங்குக்குச் சற்றுமேலாகயிருக்கலாம்.

எவ்வளவு ஜெர்மன் வலை வீசுக்கப்பல்கள் மூழ்க்கடிக்கப்பட்டனவென்று யுத்தம் முடியும்வரை சொல்லமுடியாது. ஆனால் அநேகம் சுரங்கங்களுக்கு இரையாயினவென்று தெரிகிறது.

ஒரு சரியான ஐந்தொகை போடக்கூடுமானால் டச்சு, போலீஷ், நார்வீஜியன் சுதந்திர பிரெஞ்சுக்காரர் முதலியோரின், யுத்தக்கப்பல்களையும் சேர்த்து இப் பொழுது இருதரப்பாரிடமும் யுத்தத்தில் உபயோகிக்கப்படுகிற கப்பற்படையின் எண்ணிக்கை பின்வருமாறு :—

வகுப்பு.	பிரிடிஷாரும் நேசருடையதும்.	ஜெர்மன்.	இத்தாலியன்.
முதல்தரக்கப்பல் ...	14	4	6
விமானம் தாங்கிகள் ...	7	1	...
ஸஞ்சாரிகளும் விமான எதிர்ப்புக் கப்பல்களும்.	66	6	20
நாசகாரிகள் ...	183	19	56
நீர்மூழ்கிகள் ...	75	?	99

காலம் செல்லச்செல்ல, நடப்புக்கு விரோதமாக பிரிடிஷாருடைய அந்த யுத்தக்கப்பலை மூழ்கடித்துவிட்டோம், இந்த வியாபாரக்கப்பலை நாசம் செய்தோம் என்று அளவற்ற பொய்களைக் கண்டு உத்தியோகமுறையில் செய்தி கள் எதிரிபக்கத்திலிருந்து வருவதைப்பார்த்தால் அவர்களுக்குக் கப்பற்படையின் சக்தியின்மை வெளியாகிறது.

உதாரணமாக யுத்தம் துவங்கினதிலிருந்து ஜெர்மானியரும், இத்தாலியரும் ஆங்கில முதல்தரக் கப்பல்களை (யுத்தக்கப்பல்கள், யுத்த ஸஞ்சாரிகள்) மூழ்கடித்ததாகவோ, செயலறச்செய்ததாகவோ சொல்லிக்கொள்ளும் எண்ணிக்கை 32-க்கு குறைவில்லை. இது யுத்தத் துவக்கத்திலிருந்து ஆங்கிலரின் கையிருப்பிலிருக்கும் யுத்தக் கப்பல்களின் மொத்த எண்ணிக்கையை காட்டிலும் இரண்டு பங்குக்கு மேலாகிறது. நடப்பில் ஏற்கனவே சொன்னபிரகாரம் சென்ற வருஷம் அக்டோபர் மாதத்தில் ஸ்காபாப்ளோ என்ற குடாக்கடலில் தோணிவெடியால் மூழ்கடிக்கப்பட்ட முதல்தரக் கப்பலான "ராயல் ஓக்" என்ற கப்பலைத்தவிர வேறு நஷ்டம் கிடையாது.

யுத்தத்துவக்கத்தில் பிரிடிஷாரிடம் ஏழு விமானம் தாங்கிகள் இருந்தன. அவைகளில் இரண்டு நஷ்டமாயின. அவைகளுக்கு "கரேஜியஸ்" "க்ளோரியஸ்" என்ற பெயர். ஆனால் எதிரிகள் சொல்லிக்கொள்ளும் ஒவ்வொரு செய்தியையும் நம்பினால், பத்து விமானம் தாங்கிகளை மூழ்கடித்தோ, செயலற்றோ நஷ்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஸஞ்சாரிகளைக் கவனித்தால், எதிரி சொல்லும் எண்ணிக்கைகள் மனக்கோட்டைகளாக இருக்கின்றன. பெர்லின் செய்தி பிரகாரம் நாம் 83 ஸஞ்சாரிகள் இழந்திருக்கிறோம். உண்மையில் யுத்தத்துவக்கத்தில் 62 ஸஞ்சாரிகள் தான் நமக்குண்டு. அவைகளில் மூன்றுக்குமேல் மூழ்கடிக்கப்படவில்லை.

மற்ற வகுப்புகளில் விஷயமான பேதங்கள் வெகு தெளிவாகயிருக்கிறது. நாசகாரிகள் நஷ்டமானதாகக் கொண்டாடுகிறது 92. உண்மையில் நஷ்டமானது அதில் மூன்றில் ஒன்றுக்கும் குறைவு. ஜெர்மானிய இதாலிய அறிக்கைகளின் படி நமக்கு நஷ்டமான நீர்மூழ்கிகள் 54. நடப்பில் நஷ்டம் 14.

இந்த நடப்புக்குப்புறம்பான எண்ணிக்கைகளோடு, கப்பல்களின் நஷ்டத்தைப்பற்றி அவர்கள் சொல்வதை ஒப்பிட்டால், அநேகமாக நியாயமானதுபோல் தோன்றும். உண்மையில் பிரிடிஷார், நேசதேசத்தார், நடுநிலையோர் இவர்களுடைய வியாபாரக்கப்பல் நஷ்டம், 2,514,199 டன்கள். இந்த எண்ணிக்கையை இரண்டு படுத்தி, 5,078,038 டன்கள் நஷ்டமென்றும், இதைத் தவிர 300 கப்பல்களுக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறதென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

மேற்சொன்ன கணக்கு ஆகஸ்டுமீ 4வ வரை. 12 மாதங்கள் பூருவுக்கும் கணக்கிடப்படவில்லை (இப்பாலும் கணக்கிடப்படவில்லை.)

யுத்தக் குறிப்புகள்.

வீண் பேச்சு.

ஜெர்மானியருக்கு வசிக்க இடம் போதவில்லையென்றும், மேற்கொண்டும் அவர்களுக்கு இடம் வேண்டுமென்றும் ரிப்பன்டிராப் இன்னமும் உளறிக்கொண்டிருக்கிறாராம். இதுவரை கபளீகரம் பண்ணப்படாதவைகளும் நடுங்கிக்கொண்டிருக்கிறவைகளுமான (ரஷியா தவிர) தேசங்களின் அரசர்களையும் மந்திரிகளையும் தாஜா பண்ணிக்கொண்டும் பயமுறுத்திக்கொண்டும் இருக்கிறாராம். ஒரு உபமானம் சொல்லுகிறேன். மனிதரை முழுங்கும் அரக்கர் வசிக்கும் தீவுகளிலுள்ள அரசர்கள் கொள்கையென்னவென்றால், ஒரு நாட்டார் ஜீவித்திருக்க வேண்டுமென்றால், அயல்நாட்டாரைக் கொன்று சாப்பிட வேண்டுமென்பதுதான். ஆனால், மனிதரைக்கொன்று சாப்பிடுகிற அரக்கர்கள் உலகில் வெகு பெயர்கள் இல்லை.

சில எண்ணிக்கைகள்.

செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் விமானப் படையெடுப்பால் ஏற்பட்ட சேதக்கணக்கு சில பேர்வழிகளுக்குக் கல்போட்டதுபோலிருக்கும். இங்கிலாந்தில் வசிக்கும் ஜனங்கள் சகிக்கும் கஷ்டம் மகத்தானதுதான்; இந்தக் கஷ்டங்களைப் பொருட்படுத்தாது பொருத்துவருகிறார்களென்பதிலும் சந்தேகமில்லை; ஆயினும், இந்நாள் போரில், ஊரிலிருக்கும் சாதாரண ஜனஙகளே போரில் முன்அணியென்பதை நாம் ஞாபகம் மூட்டிக்கொள்ளவேணும்; ஜெர்மானிய விமான இலாகா அதிகாரிகள் பிரிடனில் அவர்கள் செய்ததாகச் சொல்லும் சேதத்தைப்பற்றி வீசுவதைக் கவனித்தால், உண்மையில் சேதத்தின் அளவு இன்னதென்பது அவர்களுக்கு வெகு கசப்பாகவிருக்கும்.

பிரிடன் பிரதம மந்திரியின் கணக்குப்படி கொல்லப்பட்டவர்கள் 14,000 பெயர்கள், காயப்பட்டவர்கள் 20,000 பெயர்கள். இத்துடன், ஜன நெருக்கடி ஜாஸ்தி ஆக ஆக ஆகாயத்திலிருந்துவிழும் குண்டுகளினால் ஏற்படும் சேதம் ஜாஸ்தி என்பதை மனதில் வைத்துக்கொண்டு, பின்வரும் தொகைகளுடன் மேலே சொல்லப்பட்ட தொகைகளை ஒத்துப்பாருங்கள்.

ஒரு இரவிற்குச் சராசரி:—பிரிடன் பூராவிற்கும், இரண்டுலக்ஷம் பெயர்களில் சொல்லப்பட்டது ஒரு ஆள்; 132,000 பெயர்களில் காயப்பட்டது 1 ஆள்; ஜனப்புழக்கம் ஜாஸ்தியான லண்டனில் 43,500 பெயர்களில் கொல்லப்பட்டது 1 ஆள்; 30,000 பெயர்களில் காயப்பட்டது 1 ஆள்; இப்படி விடாமல் குண்டுகள் போட்டுத் தாக்கி இரண்டுமாதங்களில் ஏற்பட்ட சேதக்கணக்கைச் சென்ற யுத்தக் கணக்குடன் ஒத்துப்பாருங்கள்: லூஸ் (Loos) என்ற இடத்தில் 22 நாள் நடந்த சண்டையில் ராணுவ உத்தியோகஸ்தர்களும் சிப்பாய்களுமாக கொல்லப்பட்டவர்கள் 60,000 பெயர்கள்; அதே வருஷத்தில் அதினும் குறைந்த நாட்கள் நடந்த ஷாம்பேன் (Champagne) சண்டையில் கொல்லப்பட்ட பிரெஞ்சுக்காரர்கள் 80,000 பெயர்கள்!

மேலும், பிரிடன் பிரதம மந்திரி "பிரிடனின் விமானங்களிற்கும் யுத்தத் தளவாடங்களிற்கும் ஏற்பட்ட சேதம் வெகு சொற்பம்" என்றார். ஜலவசதிகள், விறகு, கரி முதலானவை, மின்சாரம், ஆவி, சாக்கடை, வைத்திய வசதிகள் ஒன்றும் கெடவில்லை.

கிரேக்க ஜயமுழக்கம்.

இதாலிய கொள்ளைக்காரர்களை கிரேக்கர்கள் தோற்கடித்ததில் கௌரவஸ்தர்களுக்கு அளவற்ற சந்தோஷமென்றாலும், இவர்கள் ஜயத்தால் கொஞ்சம் அளவிற்கு மேலேயே உற்சாகம் இருப்பதாக பத்திரிகைகளிலிருந்து வெளியாகிறது. இதனால் ஒரு கெடுதல் ஏற்பட இடமுண்டு. யுத்தங்களில் இடையிடையே ஒரு கட்சிக்காரருக்குத் தோல்வி ஏற்படுவது இயல்பு; அப்படி ஏதேனும் தோல்வி அகஸ்மாத்தாக சம்பவித்தால், நேசதேசத்தார் சமாசார இலாகாக்களிடம் கொஞ்சம் நம்பிக்கைக் குறைவு ஏற்படக்கூடும்; மேலும் கிரேக்கர்கள் மனமும், அவர்களிடம் அனுதாபமுள்ளவர்கள் மனமும் கொஞ்சம் தளர்ச்சியடையலாம். இவ்விதக் கெடுதலுண்டாக இன்னமொரு காரணமிருக்கிறது. உள்ளதைப் பெருக்கிச் சொல்லுவதை ஜெர்மானியரே கெட்ட எண்ணத்துடன் ஆதரிக்கிறார்கள் முக்கியமாக பல்கேரியா முதலிய 'நடுநிலைமை' நாடுகளில் அப்படிச் செய்கிறார்கள். நார்வேயில் போர் நடந்தபோது ஸ்டாக்ஹோமில் அந்த வேலை செய்தார்கள். மிதமிஞ்சின உற்சாக அறிக்கைகள் முதலில் விடுவிக்கப் பட்டதன் பயனாகவே, நார்வேயிலிருந்து பிரிடிஷ் படை பின்வாங்கினபொழுது இங்கிலாந்திலுள்ளவர்கள் மனம் சோர்வடைந்தது. துருக்கி விழிப்புடன் இருந்து, அதன் பயனாக பல்கேரியாவும் நடுநிலைமையிலிருந்து வழுவாதிருந்தால் எல்லாம் ஆரம்பித்தது போல் நன்றாகவே முடியும் என்பது உண்மை. ஆனால் ஹூண (ஜெர்மானிய) படைகள் கூப்பிடு தூரத்தில் இருக்கின்றன; அக்கிரமச் செயல்களில் தன் கூட்டுக்காரனை கையாலாகாத கூட்டாளி ஒருவன் 'ஏட்ரியாடிக்' (Adriatic) கடலில் உதைபட்டுத் தள்ளப்படவிருக்கும் தருவாயில், அவர்கள் ஏற்கனவே உதவி புரியாமல் சும்மாவிருக்கிறார்களென்று வைத்துக்கொண்டாலும், இனியும் அப்படியிருப்பார்களென்று நாம் எதிர்பார்க்கமுடியாது.

அரசாங்கத்தை எதிர்த்த ஒருவரது தாய்நாடு.

இந்த நூற்றாண்டில் அரசாங்கத்தை எதிர்த்து வெற்றியும் புகழும் பெற்றவர்களில் முக்கியமான வெனிஜீலாஸ் (Venizelos) என்பவர் கிரீட் (Crete) என்ற தீவைச் சேர்ந்தவர்; அத்தீவில் உள்ளவர்கள் வீரத்தன்மைக்கும் சுயேச்சையில் ஆசைக்கும் பெயர்போனவர்கள். கொஞ்சமும் வியவகாரம் செய்யாமல் அந்தத் தீவை நாம் வசமாக்கிக்கொள்ள எப்படி நேர்ந்தது என்பது புதிர் போட்டாற் போலதானிருக்கிறது; அல்பேனியாவிலுள்ள இதாலிய சைனியங்களில் காணப்படும் ஊக்கமின்மையும், கையாலாகாத தன்மையும், இதாலியர் கப்பற்படையையும் வியாபித்துவிட்டதென்றுதான் இதற்குக் காரணமாக நாம் கருதவேணும்.

கிரீட் வெகு முக்கியமான கேந்திர ஸ்தானம்; அதை பிரிடிஷ் கைவசமாக்கி அங்கேயே இருக்கிறார்களென்றால் அதற்கு அர்த்தம் பின்வருமாறு:

(1) ஈஜியன் சமுத்திரத்திற்கு மேற்குப் பக்கமிருந்து வருவதைத் தடுக்கலாம்;

(2) டோடெகானீஸ் தீவுகளானது இதாலியிலிருந்து சமுத்திரத்தால் வரமுடியாத விதமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன;

(3) அலெக்ஸாண்டிரியாவிலிருந்து லிபியா (Libya) கடற்கரையைக் குண்டுகள் போட்டுத் தாக்குவதைக் காட்டிலும் கிரீடிலிருந்து சுலபமாகத் தாக்கலாம்;

(4) இதாலியிலுள்ள மிலான் (Milan), டியூரின் (Turin) இங்கிலாந்திலிருந்து பாரமான (heavy) விமானங்கள் வந்து தாக்கப்பட்டு வருவதுடன், இதாலி முழுமையுமே நமது விமான சஞ்சாரத்திற்குட்பட்டதாக ஆகிவிட்டது.

கௌரவம்.

கௌரவம் என்ற விஷயத்தையே ஹிட்லரும் அவன் வர்க்கத்தாரும் இகழ்கிறார்கள்; ஆனால் இங்கிலாந்தின் 'கௌரவம்' என்ற உணர்ச்சி பலமாகவிருக்கிறது; கிரீஸிற்கு பிரிடிஷ் கவர்ன்மெண்டார் செய்த வாக்குத்தத்தப்படி நடப்பதே அவர்கள் கௌரவத்திற்கு அழகு என்பதுடன், சமீப கீழ்நாடுகளிலும் தூர கீழ் நாடுகளிலும் அவர்களுக்குள்ள நற்பெயர் அவர்கள் அப்படி நடந்து கொள்ளுவதைப் பொருத்திருக்கிறது என்பது ஆங்கிலேயர் எல்லோருக்கும் அவர்கள் கவர்ன்மெண்டாருக்கும் நன்கு தெரியும்.

தங்கள் வாக்கைக் காப்பாற்ற என்னென்ன காரியங்கள் செய்யப் போகிறார்களென்று பிரிடிஷ் கவர்ன்மெண்டார் இதுவரை வெளிவிடவில்லை. இது சரிதான்; இருந்தாலும் எவ்வளவு கட்டுப்பாடான அதிகார வர்க்கமென்றாலும், இடையிடையே இரண்டொரு ஜாடைகள் காண்பிப்பார்கள். உதாரணமாக,

(1) கிரீஸைப் பிடிக்கப் புரியப்படும் போரானது எகிப்தைப் பிடிக்கப் புரியப்படும் போருடன் வெகு சம்பந்தமுள்ளது. முதலில் சொன்ன போரில் வெற்றிபெற்று, எகிப்து போரில் தோல்வியடைவதில் புண்ணியமில்லை. சென்ற வாரம் நான் சொன்னமாதிரி, இந்த யுத்தத்திற்கு ஜீவனான இடம் சூயஸ் கால்வாய்; அந்தக் காரணத்தால்தான் நாம் ஏராளமான சைனியங்களும், உயர்தரமான யுத்தத்தளவாடங்களும் அந்தப் பிரதேசத்திலும் அதன் அருகாமையிலும் கொண்டுபோய்ச் சேர்க்கிறோம்; ஒரே அடியில் அமுக்கவேணுமென்பதுதான் நமது நோக்கம். முடிவு, மூன்று மாதங்களிற்கு முன்னிருந்த நிலைமாறி, இதாலியத் தளகர்த்தரான கிரேஸியானி (Graziani)ஐ எதிர்க்க வல்லவராக ஆங்கில தளகர்த்தரான வேவல் (Wavell) ஆகிவிட்டார்.

(3) கிரேக்கர் சுயேச்சையைக் காப்பாற்ற புரிந்துவரும் யுத்தத்தில் அவர்களுக்கு உதவிசெய்ய பிரிடிஷ் படைகள் கொஞ்சம் பின்னால் வரலாம்; எந்தத் திசையிலிருந்து வருமென்று நாம் எதிர்பார்த்துச் சொல்ல முடியாது. ஆனால் இது சொல்லலாம்; வெற்றியடைவது நிச்சயமென்று எதிர்பார்க்க முடியாத விதமாக படை திரட்டியாகும்வரை வரமாட்டார்கள்.

(4) இதிலிருந்து, அதுவரை கிரேக்கர்கள் சகாயமற்றுப் போர்புரிய வேணுமென்ற அர்த்தமில்லை. வெகு லாபகரமான சகாயம் ஏற்கனவே செய்யப் பட்டிருக்கிறது; சகாயமின்றி இத்தகைய வெற்றிகள் அடைந்திருக்கமுடியாது; இதேமாதிரியாக (இன்னவிதமென்று விவரிக்கப்படாத) இன்னும் சகாயம் அளிக்கப்படும்.

(5) கிரிஸை எதிர்க்க முஸோலினி போனவழி பிசகானவழி; அவர் பிசகின் பயன் என்னவென்றால், ஆங்கில விமானங்கள் தங்குவதற்கு வசதிகள் உள்ள இடங்கள் கிடைத்துவிட்டன; இப்படி பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்ததேயென்று இதாலிய தளகர்த்தர் கிரேஸியானி தலையில் கையைவைத்து அழத்தொடங்கிவிட்டாராம்.

(6) நாளடைவில் இந்த இரண்டு காரணங்களாலேயே நாம் வெற்றி அடைவோம் என்று சொல்லப்படுகிறது.

எவ்வளவு அந்நியோன்னியம், அப்பா!

ஹிட்லர் ரோமுக்கும் ப்ளாரென்ஸுக்கும் 1938ல் வந்தபொழுது, ஜெர்மன் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் தங்கள் கார்களிலேயே வந்து, பந்தோபஸ்து வேலைகளைத் தாங்களே எடுத்துக்கொண்டு, பல ஜனங்களைக் கைது செய்து அமளி பண்ணினார்கள்! இது நடப்பு என்றும் தனக்கு நேரில் தெரியுமென்றும் உறுதி சொல்லும் தளகர்த்தர் கிங்-ஹால் (Commander King-Hall) என்பவர், இதாலிய பிரசார மந்திரியான ஸினர் ஆல்பியர் (Signor Alfieri)யுடன் தனக்கு நடந்த ஒரு சம்பாஷணையைப் பற்றியும் சொல்லுகிறார். ஹிட்லர் வந்ததைப் பற்றி கிங்-ஹாலுடைய அபிப்பிராயம் என்னவென்று மந்திரி கேட்டாரம். அதற்கு ஆங்கிலேயர் பதில் சொன்னதாவது:—"நான் தங்களுக்கு ஒரு விஷயம் ஞாபக மூட்டுவேன், பல நூற்றாண்டுகளுக்கு முன் தங்கள் நாட்டை வந்து வாண்டல்கள் என்ற காட்டுமிராண்டி ஜனங்கள் படையெடுத்துக் கொள்ளையடித்துச் சென்றார்களே, அதுமுதல் ஜெர்மானியர் பலமுறை இதாலிக்கு வந்து கொள்ளையடித்துத்தானே சென்றிருக்கிறார்கள்." இப்படி இவர் பதில் சொன்னரென்று மந்திரி போலீஸாருக்குத் தெரிவிக்கவில்லை. இவர் பதில் சரியென்று ஒத்துக்கொண்டு, நொந்த பாவனையாக ஜாடை செய்து, இதாலியின் பெயர்போன விருந்தாளியைப் பற்றி இழிவாகப் பேசினாராம். ப்ளாரென்ஸில் தலைமை போலீஸ் அதிகாரி குட்டை வெளிவிட்டார். அவர் கிங்-ஹாலிடம் சொன்னாராம்: "இதாலி போலீஸ் பந்தோபஸ்து சரியாகச் செய்வாரென்ற நம்பிக்கை தனக்கு இல்லையென்றும், அதனால் ஹிட்லர் இதாலிக்கு வந்த சமயம் அவரை ஜெர்மன் போலீஸாரே வந்து பாதுகாக்க வேண்டியது அவசியமென்றும்" ரோமில் இருந்த ஜெர்மானிய ஸ்தானிகர் மூலம் ஜெர்மன் போலீஸ் தலைவரான ஹிம்லர் (Himmler) முஸோலினிக்கு நேராடி தாக்கல் சொல்லியனுப்பினாராம். இந்த 'அச்சு' தேசத்திய தலைவர்களுக்குள் எவ்வளவு அந்நியோன்னியம், பரஸ்பர நம்பிக்கை, பாருங்கள்!!

ஒரு ந்யூஜீலாந்து தேசத்தான் லண்டனிலுள்ள புகழ்பெற்ற வெஸ்ட்மின்ஸ்டர் பாலத்தைப்பற்றிச் சொல்லுவது.

லண்டனையும், லண்டன் பட்டணத்தாரையும் பற்றி டேவிட் லோ என்பவர் சொல்லுவது.

தேச பக்தியையும், பொறுப்பின்மையைப்பற்றியும் ஒரு விகட சித்திரக்காரர் எழுதியது.

வெஸ்ட்மின்ஸ்டர் பாலத்தைப்பற்றி 'ஒரு ந்யூஜீலாந்து தேசத்தான்' என்ற தலையங்கத்தின் கீழ் டேவிட்லோ என்ற புகழ்மிக்க விகடச்சித்திரக்காரர் ஒலி பரப்பும்போது சொன்னர்.

ஏனையரைக் காட்டிலும் லண்டன் பட்டணத்தார் உயர்வானவர்கள் அல்லது தைரியமுள்ளவர்கள் என்று சொல்லும் இங்கிதமற்றவர்களை நான் பார்க்கவில்லை. அந்த உயர்ந்த ஜாதி என்ற "ஹம்பக்" இங்கே காணேம். நற்குணங்களுக்கெல்லாம் ஸ்வான் பாத்தியம் ஒரு தேசத்தார் மட்டும் கொண்டாட முடியாதென்றும், பிரிடனில் மட்டும் அல்ல, சுதந்திரங்கொண்ட ஸாம்ராஜ்ய நாடுகளில் மட்டும் அல்ல, அமெரிக்கா, சைனு, பிரான்ஸ், ருஷியா—ஜெர்மனியிலும்கூட சுடுபட்டு, சிறைப்பட்டு, பீடிக்கப்பட்டு, வேட்டையாடப்பட்டுத் தவிப்பதால் அந்தத் தேசத்திலுள்ள சான்றேரைப்பற்றி நாம் அதிகம் கேள்விப்படக்கூடவில்லை—எல்லா தேசங்களிலும், சான்றேர்களும், வீரர்களும் இருக்கிறர்கள். தேசம், ஜாதி இவைகளுக்குள்ள பிரத்யேக விஷயங்களைப்பற்றி ஸர்வாதிகாரிகள் ஸாங்கோபாங்கத்துடன் சொல்லும் பொதுவான வசனங்களைச்சொல்லி எல்லா நற்குணங்களையும் தங்களுக்கே அர்ப்பணம் செய்துகொண்டு, எல்லா தீய குணங்களையும் பாக்கி எல்லாருக்கும் அமைத்து விடுகிறர்கள். ஆயினும், கண்ணியம், அன்பு, உதாரம் பொருந்தியவரும், திரவமற்றவரும், கொடியவரும் எல்லா தேசங்களிலும் உண்டு. "திரவமற்றவர்" என்பது வெகு பயங்கரமான வார்த்தை. தான் திரவமற்றவனல்லவென்று ஹிட்லர் சொல்லிக்கொள்ளும் பாசாங்குகளை மறுதளிக்க ஏதாவது ஸாக்ஷியம் தேவையானல், நாஸிகளின் அரிய நவீன திட்டம் இருக்கின்றதே: அதன்படி கஷ்டப்படும் ஒரு யூதக்கிழவிக்குத் தர்மம் செய்வதும், அடிமைப்பட்ட போலிஷ்காரனுக்கு ஒரு அன்பான வார்த்தை சொல்லுவதும் கைதுமுகாமாவது, சாட்டையடியாவது ஸம்பாதித்துக் கொடுக்கக்கூடிய குற்றங்கள் என்று ஏற்படுத்தி அநுதாபங்காட்டுவதையே அடக்குகின்றர்களே அதுவே போதுமானது. இன்று லண்டன் பட்டணத்தார் காட்டும் பலம், உலகத்தில் சாதாரணமாக ஈகை இரக்கம் காட்டவேணுமென்ற கொள்கையைக் காப்பதற்காகச் சாதாரண நெறியுள்ள மனிதர்களின் முதன்மையாகவும், தலைமையாகவும், நிற்பதே. நாஸிகள் வேறுவிதமாக் நினைப்பது ஸஹஜமே: இந்த யுத்தம் கொடிய பிரிடிஷ் ஸாம்ராஜ்யம் தான் ஸம்பாதித்ததைப் பத்திரப்படுத்திக்கொள்ள செய்யப்படும் ஏகாதிபத்ய யுத்தமென்ற புளுகைப் பரப்புகிறர்கள். நம் தேசத்தை மட்டும் தனிமைப்படுத்த யத்தனிக்கிறர்கள். நாம் மறுபடி அந்தப் பழைய

ஸ்ரீமத்காம்பீர்யமும் செருக்கும் கொண்ட மனப்பான்மையை அடையும்படி உத்ஸாகப்படுத்திக்கொள்ள எதிரிகள் வெகு பிரியப்படுகிறார்கள். அவர்கள் சொல்லிக்கொள்ளும் பெருமைப் பேச்சுகளுக்கு எதிராக நாம் என்னபெருமை சொல்லிக்கொள்ளுகிறோம் என்றும், அவர்களுடைய தேசிய கர்வத்தை நாமும் அநுஸரித்து கர்வம்கொள்ள மாட்டோமாவென்றும் கவனிக்கிறார்கள். "நம்முடைய பிரிடன் தேசம்" "நம்முடைய ஜான் புல்" என்று நம் ஜாதி உயர்வைப் பற்றி பலமாக கூச்சல்போட வேணுமென்று எதிரிகள் நினைக்கிறார்கள். நாம் அப்படிச் செய்தால்தான், நம்மிடம் முன்னேற்றம் கிடையாதென்று அவர்கள் கொண்டிருக்கும் அடிப்படையான கொள்கை ருஜுசெய்யப்படும். அவர்களுடைய கொள்கை என்னவென்றால், ஒடுக்கமான, கர்வம் மேல்கொண்ட தேசியத்தைத் தவிர வேறு காரணத்தால் மானிட முன்னேற்றம் ஏற்படாதென்பதும், பிறதேசத்தாரை அழிப்பதில் பெருமையும் வெகு முரட்டுத்தன சுயநலமும் தான் ஜனங்கள் தங்கள் தாய் நாட்டுக்குக் காட்டக்கூடிய அன்பு என்பதுமே. இதைத்தான் இந்த முட்டாள்கள் தேசபக்தி என்கிறார்கள்.

தேசபக்தியின் மற்றொரு ஸ்வரூபமிருக்கிறது. நம்முடைய ஸம்பூர்ணமான ஸத்பாவங்களாலும் ஸாதுபாவங்களாலும் உலகத்தாரை எவ்வளவு முடியுமோ அவ்வளவு பூர்ணமான திறனும், பிரகாசமும் கொண்டோராகவும், இன்பமனத்தோராகவும் செய்ய வேண்டுமென்ற சிரத்தையுள்ளவர்களின் தேசபக்தியே அது. அவர்கள் பிறதேசத்தாரைத் தங்களைக்காட்டிலும் கீழ்ப்பட்டவராகச்செய்து க்ஷேமமடைவதை நினையாமல், இன்னும் அதிகமான க்ஷேமங்களுக்கு உயர்த்த வேணுமென்று நினைப்பார்கள். இந்த நற்கதி விசுவாசமுள்ளவர்களுக்குண்டு.

புதிய திட்டம், புதிய செல்வ நிர்வாஹம், புதிய ஒழுக்கம், இதைப்பற்றித்தான் இந்த யுத்தம் என்று நினைக்கிறேன். பிரிடிஷ் ஸாம்ராஜ்யம் யுத்தம் செய்வதும், லண்டன் ரணகளமாக யிருப்பதும், இங்கு இவ்வளவு பேர்கள் ந்யூ ஜீலாந்துக்காரர்கள் வேலை செய்துகொண்டிருப்பதும், நான் வெஸ்ட் மின்ஸ்டர் பாலத்தைக் கடக்கும்போது இவ்வளவு அவசரமாகப் போகவேண்டியிருப்பதும் அதற்காகவே. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் படையெடுத்துவந்த கூட்டங்களை விரட்டியடித்த போயடிஸியா என்ற ராணியின் உருவச்சிலையும் அவள் ஓட்டிக்கொண்டிருக்கும் கற்குதிரைகளும் காணப்படுகின்றன. அதைப்பார்த்தால் இரவாடை பூண்ட திரு. வின்ஸ்டன் சர்ச்சிலைப்போல் தோன்றுகிறது. நூற்றாண்டுகளாக வாழ்கையின் விசாலத்திற்காகவும், சீரான வளர்ச்சிக்காகவும் நாம் செய்யும் தளரா முயற்சிக்கும், பாமர ஜனத்தின் போராட்டத்திற்கும் அறிகுறியான "பாமரரின் வீடு" என்று சொல்லப்பட்ட பார்லிமெண்டு என்ற சன்ன வேலையுள்ள மாளிகை எனது இடது பக்கத்தில் நிற்கிறது. அதற்கு முன்னால் க்ராம்வெல் என்பவரின் உருவச்சிலை நிற்கிறது. அந்த மத்திய வகுப்பைச் சேர்ந்த மனிதன் மூளையற்ற அடக்கு முறைகளில் அருவருப்புக்கொண்டு, கிளம்பி, அதை உதைத்து எறிந்தவன். அப்படியே குறுக்கே வெள்ளை மாளிகைக்குச் சென்றால் (Whitehall) மண்டை வீக்கம் கொண்ட கடைசி யதேச்சாதிகாரியை பைஸல் செய்த காப்டன் நெல்ஸன் என்பவர் ஸ்தம்பத்தில் நிற்கிறார்.

லண்டன் பட்டணத்தார் வைரம் பாய்ந்த கட்டைகள். எங்களைப்பற்றி கவலைப்பட்டுக்கொண்டு ந்யூஜீலாந்தில் இருக்கும் உங்களுக்கு நான் ஸ்டெப்னி என்ற ஊரிலுள்ள ஒரு கிழவியைப்பற்றிச் சொல்லுவேன். அவள் தலைக்குமேல் வீடு நொருங்கி விட்டது. அவளை வெளியில் எடுத்து ஒரு கோப்பை டீ சாபிட்ட பிறகு — எல்லா தடபுடல்களிலும் பிரிடிஷாருக்கு தேறுதலளிக்கும் வஸ்து அது தான்—"எப்படி யிருக்கிறது" என்று கேட்டார்கள். "ரொம்பஸரி, உடம்பு கொஞ்சம் குலுங்கிற்று" என்றாள். இன்றுதினம் இந்தமணி நேரத்தில் லண்டன் எப்படியிருக்கிறது என்பதை அவ்வார்த்தைகள் காட்டுகின்றன. "எல்லாம் ஸரி—உடம்பு கொஞ்சம் குலுங்கிற்று."

ராஜத்துவ ஆகாயப்படை, ஜெர்மனி குண்டு வீச்சு.
எதிரி ஆகாய விமானிகளின் வழிகளின் ஒற்றுமை வேற்றுமை.
சங்கியையில் நம்பிக்கையின் பிரயோஜனம்.
வேலைக்காரர் கூட்டம் தயார் செய்வதினால் ஏற்படும் வித்தியாசம்.

(வியூகரசன வித்தை நிபுணரால் தயாரிக்கப்பட்டது.)

ஜெர்மனியின் ஆகாய எதிர்ப்பின் அபிவிருத்தியை அறிய முயல்வது மிகவும் அவசியமானதும் முக்கியமானதுமாகும். பிரிடனின்மேல் படை எடுப்பானது இப்பொழுது சில பருவங்களைக் கடந்து விட்டது. முதலாவது பிரிடிஷ் பாதுகாப்பை முரட்டுத்தனமான எதிர்ப்பினால் நாசமாக்கமுயன்றது. இதனால் ஏற்பட்ட பெருத்த நஷ்டத்தோடு சென்ற ஆகஸ்ட்டு மாத முடிவில் இந்த வழி தவறென்று நிதர்சனமாயிற்று.

ஜெர்மானியர்கள் இன்னம் இந்த தவறை முற்றிலுமுணராமல் கோயரிங் இந்த எதிர்ப்பில் தலைமை வகிப்பார் என்று அறிவித்து, பழையபடி பாமர ஜனங்களைத் தாக்கும் முறையையே கைக்கொண்டார்கள். அதுவும் பிரயோஜனமற்றதாகப் போகவே, இப்பொழுது ஜெர்மானியர்கள் உரைவு போரில் (அதாவது எந்தக்கக்ஷி அதிக நாள் சமாளிக்கமுடியுமென்பது) இறங்கியிருக்கிறார்கள். இது பரிகாசமல்ல — உண்மை.

பெருத்த படைகளோடு கூடிய ஒவ்வொரு சண்டையிலும், ஒரு ஸ்திதியில் ஒருவரையொருவர் பலமாகத்தாக்குவதுபோல் காணப்படும். ஆனால் அது உண்மையில் உரைவுபோரே. இது எதிரிகளின், ஜயத்தைக்கோரி நிச்சயமாய் அடையக்கூடிய சக்திக்குறைவைக் காட்டுகின்றது.

சமீபகாலமாக யுத்த முஸ்தீபுகளைத் தயாரிக்க ஆரம்பித்திருக்கிற பிரிடன் அதனுடைய முழுபலத்தையும் இன்னம் அடையவில்லை. ஆனால் ஜெர்மனியோ மும்மரமாகப்பல வருஷங்களுக்குமுன்பே தன்னுடைய பலத்தைச் சேகரம் செய்ய ஆரம்பம் செய்து விட்டதால் தற்போது தன்னுடைய முழு சக்தியையும் அடைந்திருக்கிறது. ஆதலால் அது வெற்றியடைய வேண்டுமானால் ஏற்கனவே அடைந்திருக்கவேண்டும். அது தற்பொழுது உரையும் போருக்கு துவக்கி யிருப் பதே அதன் தாழ்மையை ஒத்துக்கொண்டதாகும்.

இந்த உரையும் போரில் அது எப்படி வெற்றி அடைகிறதென்று பார்ப் போம். சுமார் ஒரு ஆறு (இப்பொழுது பத்து-Ed.) வாரகாலமாக லண்டனின் பேரில் நடந்து வந்த எதிர்ப்பானது இப்பொழுது ஒரு இராக்கால எதிர்ப்பாகக் குறைந்து விட்டது. ஜெர்மானியர்களுக்குத் தங்கள் ஆகாயப்படை தங்க இடங்கள் சமீபமாகயிருப்பதால் அவர்கள் சுலபமாகத்தாக்க வசதிகளிருந்தாலும் அது அப்படிச்செய்யாததற்கு காரணம் பிரிடிஷ் சானலைத் தாண்டிவரும் எந்தப் படையையும் ராஜத்துவ ஆகாயப்படை சமாளிக்குமென்ற உணர்ச்சியேயாகும். ஜெர்மனியில் சென்று தாக்க மிகவும் தூரம் போகவேண்டியிருந்தாலும், ராஜத்துவ ஆகாயப்படை இரவில் ஜெர்மனியை தாக்கி வருகிறது.

பிரிடிஷ் ஆகாயப்படைக்கு எதிரியின் மாறுதல் வழி முக்கிய கவனிப்பு அம்ச மாக யிருந்தாலும், அவைகளை எடுத்துக்கொள்ளாமல், முடிவைக்கவனிப்போம். பிரிடிஷ் ஜெர்மனியின் யுத்த பலத்தை அழிப்பதுபோல் அவ்வளவு ஜெர்மனியால் பிரிடிஷின் யுத்த பலத்தை அழிக்க முடியவில்லையென்பது நன்றாகத் தெரிகிறது. ஆகையால் அவர்கள் வேறுசில உத்தேசங்களைக் கைக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுடைய யுத்தம், சாஸ்திர விருத்தமாகவும், நாகரீக மற்றதாகவுமிருக் கிறது. அவர்கள் லண்டனைத்தாக்கினபோது இரண்டு ராணுவஸ்தலங்களை நாச மாக்கி விட்டதாக கேழ்விப்பட்டேன். ஆனால் ஒன்றுகூட நாசமாக்கப்பட்டதாகக் காணவில்லை. ஆகாயவிமானம் அப்பொழுதுதான் கண்டுபிடிக்கப்பட்டிருந் தாலும் ஜெர்மனி சென்ற யுத்தத்தில் எவ்வளவு வெற்றி அடைந்ததோ அதைவிட இப்பொழுது அதிக வெற்றி அடையவில்லை, இருந்தாலும் இப்பொழுது அழ கான ஒரு கிறிஸ்துவக்கோவிலை இரண்டுதரமும் ஜனங்கள் வசிக்கும் பத்து கஜத் துக்குட்பட்ட சில வீடுகளை இரண்டு தடவையும் தாக்கியிருக்கிறார்கள்.

சரியான குறிப்பில்லாத இந்த நாசக்காக்ஷி எதை உணர்த்துகிறது?

ஜெர்மனி சரியானபடி பிரயத்தனத்தை எடுத்துக்கொள்ளாமலும், ஏதோ பறந்துவந்து மணிப்படி குண்டுபோடுவதாலும், அவர்களுடைய ஆகாய விமானங் கள் தங்கள் லெக்கைகண்டுபிடிக்க முடியாதபடிதடுக்க பிரிடிஷ் ஆகாயப்படையின் எதிர்க்கும் நெருப்பானது சாமர்த்தியமுள்ளவைகளாக இருக்கிறது என்ற முடிவை அடைவதிலிருந்து நாம் தப்பமுடியாது. எல்லா ஆகாயப்படைக்கும் தங்கள் யாத்திரையில் சில சமயங்களில் இம்மாதிரியாக லக்ஷியமில்லாமல் குண்டு வீசும்படி நேரிடுவது சகஜம், ஆனால் ஜெர்மானியரோ இம்மாதிரியே முடிவு வரையில் செய்கிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட எல்கைக்குள் ஒரு முக்கியமான ஸ்தலமொன்றிருக்கிறதென்று வைத்துக்கொண்டோமானால், அவர்கள் கடிகாரம் மாதிரி — அதாவது குறிப்பிட்ட திசையிலிருந்து குறிப்பிட்ட வேகத்துடன் பறந்து வந்து அந்த எல்கைக்கு ஏதோ சற்றுச் சமீபமாகவருகிறார்கள். அவர்களால் தாழப்பறக்க முடியாது, ஏனென்றால், ஆகாய விமானங்களை எதிர்க்கும் பீரங்கிகள் அவர்களைப் பிடித்துவிடும். ஆகையால் அவர்கள் உயர இருந்தபடியே குண்டுகளைப்போட்டு விட்டு, எதிரிகளுக்கு நஷ்டம் உண்டுபண்ணி விட்டதாக நிச்சயம்செய்துகொண்டும் குறைந்த பக்ஷம் ஜனசங்கத்தின் நீதி நிலையைக் கெடுத்துவிட்டதாக எண்ணிக் கொண்டும் தங்களுடைய ஸ்தானங்களுக்குப் போய்ச்சேருகிறார்கள்.

காப்டன் பால்போர் சொல்லிய பிரகாரம் இவ்வித முரடான பக்குவமற்ற வழிகள் சண்டையில் ஒருபொழுதும் ஜயமளிக்காது. ஜெர்மானியர்களுடைய உபாயமானது பாமர ஜனங்களைத்தாக்குவதில் முடிந்திருக்கிறது. இந்த ஜனங்களோடு பழகினால் அவர்கள், இந்த எதிர்ப்பினால் ஏற்படும் அசௌகரியங்களை, ஒரு விஷச்சளியால் உண்டாகும் ஜுரத்தினாலோ அல்லது போக்கு வரத்து நிருத்தத்தினால் ஏற்படும் அசௌகரியத்திற்கோ, சமானமாகப் பாவிக்கிறார்களென்பது நமக்குத் தெரிகிறது — இது ஒரு தொல்லையே தவிர அபாயமான விஷயமில்லை.

அன்னிய தேசத்தார்கள் பிரிடிஷ் ஜனங்களின் வைராக்கியத்தை மெச்சுகிறார்கள். ஆனால் பிரிடனில் பிறந்தவன் இதை ஒருபெருமையாக எண்ணவில்லை. பிரிடன் யுத்தத்தால் ஏற்படும் செலவுகளை தெரிந்துகொண்டே சண்டைக்குச் சென்றிருக்கிறது. ஆகையால் இந்தச்செலவு திட்டத்தை எதிர்த்துத் தர்க்கிப்பது ஒரு தேசத்தின் தன்மைக்கோ, இயல்புக்கோ பொருத்தமில்லை யென்று தெரியும். ஜெர்மானியர்களோ மாறான அபிப்பிராயத்தைக்கொண்டு தாக்குகிறார்கள்.

பிரிடிஷ் வழிக்கங்கள் எவ்வளவு வித்தியாசமாகயிருக்கின்றது. ஒவ்வொரு தாமும் எதிரிகளின்மேல் குண்டுபோடப்போகுமுன், மிகவும் ஜாக்கிரதையுடன் தயார் செய்யப்பட்ட படையிடம் நுட்பமாக எந்த ராணுவஸ்தலத்தைத் தாக்க வேண்டுமென்ற எல்லா விஷயங்களையும் போதித்துச்செய்கிறது. எந்த இலக்குத் தாக்கப்படவேண்டுமோ அதுபோல் பிரதிரூபம் ஒன்று தயார் செய்து, இதின் மூலம் பலகேள்விகளால் அந்தப்படை, தாக்கப்படவேண்டிய இலக்கின் அடையாளங்களை, தாங்கள் புறப்படுமுன் கேட்டுத்தெரிந்து கொள்ளுகிறது. இவர்கள் ஜெர்மனி யுத்த பலத்திற்கு மிகவும் ஏராளமான அழிவையுண்டுபண்ணிவருகிறார்களென்பது நிச்சயமாய்த் தெரிந்த விஷயம். இவர்கள் ஜெர்மனியின் உற்பத்திச் சக்தியில் ஐந்தில் ஒரு பாகத்தை (20 per cent) ஒடுக்கிவிட்டார்கள், ஆனால் ஜெர்மனியின் எதிர்ப்போ பிரிடிஷின் உற்ப்த்திச்சக்தியில் கொஞ்சமும் குறைவடையும்படி ஒரு வல்லமையும் காட்டவில்லை.

ஜெர்மானியர்கள் கடிகாரத்தை ஒத்து பறந்து வந்து குண்டு வீசுவதற்குப் பிரதியாக இவர்கள் ஒரே எதிர்பார்த்த முடிவைத்தரக்கூடிய சாஸ்திரப்படி நடத்தப்படும் எதிர்ப்பை கைக்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனி பிரிடிஷ் ஜனங்களின் கோபத்தையும் எரிச்சலையும் கிளப்பிவிடலாம்; ராஜத்துவ ஆகாயப்

படையோ, ஜெர்மானியர்களை வேலை செய்ய விடாமல் தடுக்கிறது, அவர்களுடைய கப்பற்பண்டகசாலைகளுக்குச்சேதமுண்டுபண்ணுகிறது, அவர்களுடைய யந்திர சாலைகளைப் பாழாக்குகிறது, சண்டைக்குத்தேவையான அவசிய முஸ்தீபுகளை உற்பத்தி செய்ய வொட்டாமல் தவிர்க்கிறது.

இந்த இரண்டு ஆகாய எதிர்ப்புகளைப்பற்றி இன்னம் சற்றுத் தெரிந்து கொள்வது ஒரு போதனையாகும். ராஜத்துவ ஆகாயப்படை தங்கள் லக்ஷியத்தைக் குறிப்பாகத் தாக்கும்பொழுது, ஜெர்மானியர்கள் எதிரிகளின் ராணுவஸ்தலங்களைத் தாக்குவதில் தவருமல் தப்பு ஏற்படுவது அவர்களின் பயிர்ச்சிக் குறைவினலோ, தயார் செய்வதில் சிரத்தையின்மையாலோ, அல்லது பாமரஜனங்களின் வருத்தத்தை உல்லங்கனம் பண்ணுவதினலோ? இல்லை.

மறுபடியும் இது ஆகாயப்படையை எதிர்க்கும் பாதுகாப்பின் சாமர்த்தியத்தில் வித்தியாசமே. ஜெர்மனி ஜனத்தொகையின் மிகுதியில் நம்பியிருக்கிறதாகத்தெரிகிறது. பிரிடிஷின் சாஸ்திரீயமாய் சுடும் சாமர்த்தியமுள்ள துப்பாக்கிக்காரர்களுக்குப் பதிலாக அவர்கள் ஏராளமான ஆள் கூட்டத்தை வைத்துக்கொண்டு, ஆகாயத்தை குண்டுகளால் நிறப்புவதன்மூலம் ராஜத்துவ ஆகாயப்படையை கீழ்வந்து தங்களுடைய லக்ஷியத்தைப் பொருக்கமுடியாமல் பண்ணிவிடலாமென்று நம்புகிருர்கள். அவர்கள் இதில் வெற்றி யடையவில்லை.

பொதுஜனங்கள் எப்படி பிரிடிஷ் ஆகாயப்படை கீழ்ப்பாய்ந்து தங்கள் லக்ஷியத்தின் பேரில் நேராகக் குண்டுகளை வீசுகிறதென்று சொல்லுகிருர்கள். வாஸ்தவத்தில் ஜெர்மனி சாமர்த்தியம் போதாததினல் இந்த புதிய உரைவு சண்டையிலும் தோல்வியடைந்து வருகிருர்கள். ராஜத்துவப்படை அவர்களுடைய தாக்குதலில் ஜயமடைந்து வருகிருர்கள் ஏனென்ருல் அவர்களிடம் சிரேஷ்டமான யந்திரங்களிருக்கின்றன, அதிகம் சிரத்தையுடன் தயரிர் செய்யப்பட்ட வேலைக்காரர்களிருக்கிருர்கள், ராணுவஸ்தலங்களை சாஸ்திரீயமாய்க் குண்டுகளால் தாக்கும் பழக்கமுடையவர்களாகவுமிருக்கின்ருர்கள்.

பிரிடன் பேசுகிறது.

இந்தத் தொடர்ச்சி இன்று ராத்திரி நாம் ஒரு புதிய உபந்நியாசகரை அறிக்கை செய்கிறோம். இவர்தான் டாக்டர் வில்லியம் டெம்பிள். இவர் நமது பெரிய மதியூகிகளிலும், பேசுந்திறமை வாய்ந்தவர்களிலும் ஒருவரென பரவலாகத் தெரிந்ததே. இந்தச் சண்டையில், தன்னுடைய முன்னேற்றமான உண்மை அபிப்பிராயங்களைச் சொல்ல கொஞ்சமும் பின்வாங்காதவர். இது காரணத்தாலேயே, பலருடைய வெறுப்புக்குப் பாத்திரமானவர். இவர்தான் 'யார்க்கு' நகரத்துத் தலைமை குரு.

இந்தத் தருணம் மனித ஜீவியசரித்திரத்தின் திரும்புமுனைகளில் ஒரு முக்கியகாலம் என்பது ஒவ்வொருவரும் ஒப்புக்கொண்டதே. இந்த யுத்தம் கேவலம் தேசங்களின் ராஜாங்கத்திற்குரிய நாய்ச்சண்டையல்ல. இது ஒற்றுமைப்படாத இரண்டு ஜீவியநடைகளின் சச்சரவாகும். ராஜாங்கங்களின் நன்மைகள் உள்ளடங்கிய போர் என்பது உண்மைதான். கிரேட் பிரிடனும் தன்னுடைய நலன்கள் நிதர்சனமாகப் பயமுறுத்தப் பட்டதால்தான் இதில் நுழைந்ததென்பதும் வாஸ்தவம். முதலில் இந்த விஷயங்களே மிகவும் பெரிதாகத் தோன்றி, பலருடைய மனதிலும் உண்மையாக கவனிக்கவேண்டிய முக்கிய அம்சங்கள் மறைவுபட்டுவிட்டது. அட்லாண்டிக் மகாசமுத்திரத்தின் இருபுறமுள்ள சில லெக்ஷிணிகள் சம்பந்தமாய்—இதுவே நிஜமாகும். நாம் சுயநலத்தைமுன்னிட்டே இப்படி நடக்கச்செய்வதால், எந்த உன்னதமான கொள்கையும் இதன்மூலம் ஸ்தாபிக்கப்படவில்லையென்று நமக்குச் சொல்லப்படுகிறது. என்னுடைய முக்கிய வாதத்திற்கு நேர் சம்பந்தமிருப்பதால், இரண்டு விஷயத்தைப்பற்றி இங்கு சொல்ல வேண்டியிருக்கிறது. முதலில், சென்ற 20 வருஷ காலங்களாகஇங்கிலாந்தில் கேவலம் சுயநலமல்லாத ஒருகோட்பாட்டைக் கைபிடித்து ஆதரவு செய்ய ஒரு வலுத்த பொது ஜன அபிப்பிராயம் இருந்து வருவதும், இந்தச்சண்டை துவக்கத்திற்குப் பின், இதில் மற்றும் அநேகர் சேர்ந்துவருவதும் ஒன்று. ஆனால், இரண்டாவதாக இவ்விதம் பிடித்தமன்னியில் இந்த விஷயத்தை உள்நோக்கிப் பார்ப்பது நீதிக்குக் கொஞ்சமும் சரியல்ல. ஒரு வீடு நெருப்புப் பிடித்து எரிவதைப் பார்த்தும், அதற்குள் ஒரு குழந்தையிருப்பது தெரிந்தால், கொஞ்சமும் தாமதமன்னியில் அந்தக் குழந்தையைக் காப்பாற்றச்செய்வதே கடமையாகும். கேவலம், பிறர்கள் நம்மை நன்குமதிப்பார்கள், பரிசு வழங்குவார்களென்ற சுயநல எண்ணங்கள் நமக்கு உதிக்காமலிருக்கிறதா என்று அறிந்து நடக்கவேண்டுமென்று தாமதம் செய்வது தப்பாகும். நமது முக்கிய கருத்து குழந்தையைக் காப்பாற்றுவதேயாகும். இதுபோல், இதில் முக்கிய விஷயம் சுதந்தரத்தைக் காப்பாற்றச்செய்வதே.

விரோத ராஜரீகங்களின் தன்மையைப்பற்றி பலவிதமாகச் சொல்லப்பட்டாலும், இதை ஒரு நிமிஷத்தில் இங்கு சொல்லிவிடுகிறேன். சென்ற ஏழு வருஷங்களாகக் கிரேட் பிரிடனிலும், ஜெர்மனியிலும் நடந்துவரும் ஜீவிய விஷயங்களென்ன, அல்லது, செக்கோஸ்லேவேக்கியா, போலந்து, டென்மார்க்கு, நார்வே, ஹாலண்டு, பெல்ஜியம், பிரான்ஸ் இவைகளில் நாஸி (Nazi) ஆளுகைக்குப்பின் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களென்ன, இவைகளை அறிந்த எவரும், நாஸி (Nazi) ஆளுகை கேவலம் வெற்றியின் கொடுங்கோலென்றும், அதை மேன் மேலும் பரவச்செய்ய பயமுறுத்தப் படுத்தப்படுகிறது என்பதையும் சந்தேகிக்க இடமில்லை. இருந்தாலும், இந்த யுத்தமானது சுத்தப் பிரகாசத்திற்கும், கலக்காத இருட்டுக்கும் ஏற்பட்ட சண்டையல்ல; ஆனால், இது சுயேச்சைக்கும், கொடுங்கோலுக்கும் உள்ள போரே. இதில் உலகம் முழுவதும் மாட்டிக்கொண்டிருக்கிறது. இப்பவும் ஐரோப்பா முழுவதும் நாஸி (Nazi) ஆளுகைக்குட்படும்படி நேர்ந்தால், அதிகப் பயங்கரமான போராட்டமன்னியில், சுயேச்சை ஒரு இடத்திலும் நிலைத்திருக்கவொண்ணாது. சரித்திரத்தின் அடுத்த நீண்ட காலசந்தியாக, ஐரோப்பா, அமெரிக்கா இவைகளின் எதிர்கால நாகரீகம் திராசுத்தட்டில் இருந்துவருகிறது. இது வாஸ்தவமானல், பிரிடிஷ் ராஜாங்கத்தார் பாசாங்கு செய்வதுபோல் ஒரு வருஷமுன் போட்ட கேள்விகள் அர்த்தமில்லாததுடன், அவைகள் விஷயங்களை ஆழ்ந்து உணர்ந்து போடப்படவில்லை என்ற குற்றத்திற்கும் உள்ளாகச் செய்கிறது. அவைகள் தற்காலம் மனித வர்க்கத்தைப் பீடித்திருக்கும் சிரமத்திற்கு எவ்வித சம்பந்தமுமில்லை.

ஆங்கிலேய சரித்திரத்திலும், இக்கால ஆங்கிலேய ஜீவிய நடைகளிலும், அநேக பாகங்கள், உயர்ந்த லக்ஷண பூர்த்தி ரீதியாய் குற்றங்களாகும். இவைகளை எடுத்துக் காண்பிப்பவர்களுக்கு நாம் கடமைப்பட்டிருப்பதுடன், நமது மனச்சாக்ஷியையும் தீட்டி வைத்துக்கொள்ளவேண்டும். ஆனல், இந்தக்குறைகள் சுயேச்சையின் குறைவுகளாகவேயிருக்கும் நிலைமையில், பொருளாகமாட்டாது. விரிவாகப் பேசினல், பிரிடிஷ் கொடி உறுதியாக சுதந்திரத்தை அபிவிருத்திசெய்யவே நின்றுவருகிறது. சுயேச்சையின் தத்துவத்தை எடுத்துப் போதித்தால், ஒருக்கால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளச் சற்று தாமதமானலும், கிரேட் பிரிடன் அதைக் கேட்காமலிருப்பதில்லை. சில சமயம் கிராம்மியமும், பிசகானவுமான வார்த்தைகளின் உபயோகத்தால், தப்பபிப்பிராயங்கள் உண்டாகிறது. உலகத்தில் சில பாகங்களைக் கிரேட் பிரிடனுக்குச் சொந்தம்போல் வழக்கப்படி பேசுவதால் சில ஆங்கிலேயர்கள் தப்பு நடைகளுக்கு இடங் கொடுக்கிறுர்கள் என்பது எனக்குத் தெரியும். உலகத்தில் ஒருபாகமும் கிரேட் பிருடனுக்குச் "சொந்தம்" என்று, ஒரு மனிதனுக்கு அவன் வீடும், தோட்டமும் சொந்தம் என்று சொல்லும் அர்த்தத்தில் சொல்வதற்கில்லை. உதாரணமாக, மத்திய ஆப்பிரிக்காவில் சிலபாகங்களை ஒழுங்கு செய்து நடத்திவர கிரேட் பிரிடன் எடுத்துக்கொண்டால், அது, அந்த ஊர் ஜனங்களை, மற்ற நாகரீக தேசத்தார்களின் ஒரு குடும்பம்போல், சுயாக்ஷி

யில் தயார் செய்யும் முக்கிய கடமையாக எப்பொழுதும் கருதிவருகிறது. சிலசமயங்களில், சுயநலத்தின் கட்டாயமாக சிலசங்கதிகள் நடத்தப்படுவது, முக்கிய கருத்தின் குறுக்குவெட்டுத்தான். பிரிடிஷ் சாம்ராஜ்யமும், மற்ற மனித போதனை சங்கங்களைப்போல், எல்லாத் தருணங்களிலும், தன் உண்மைக் கொள்கைகளை நிறைவேற்றமுடியாமலிருந்துவருகிறது. ஆனால், கொள்கைகளும், உறுதியான கருத்தும் எப்பொழுதும் இருந்துவருகிறது. சுயேச்சையின் முன்னேற்றமும், அதற்கனுகுணமான பழக்கமும், சில சமயங்களில் சற்று வழுவினாலும், உறுதியாக உள்ளதே.

பெரிய சாம்ராஜ்யம் ....இதே கொள்கையை நிரூபிக்கிறது. நாம் இப்பொழுது செய்வதைக்காட்டிலும், இன்னும் வேகமாய்ப் போகவேண்டும் என்று என் சொந்த அவா. ஆனால், கீழ் இந்தியக் கம்பெனி (East India Company)-யிலிருந்து பொறுப்பு பிரிடிஷ் ராஜாங்கத்திற்கு மாற்றப்பட்டது முதல், இந்தியா சம்பந்தமாய் ஏற்பட்டுவரும் கோர்வையான சட்டதிட்டங்கள் ஒருவழிப்பட்டே வந்துகொண்டிருக்கின்றன. அது சுயாக்ஷி முகமே நோக்கியதாகும். நான் சொல்லுவது இன்னும் சீக்கிரமாய்ப் போகவேண்டுமென்பதே. ஆனால், நாம் போய்க்கொண்டிருக்கும் மார்க்கம், சுதந்திரம் விரும்பிய எல்லாருடைய நோக்கப்படிக்கும் சரியாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது. இந்தியாவின் தற்போதைய அரசியலை ஸ்தாபித்த 1935-ம் வருஷத்திய மசோதா, அதைவிட ஜாஸ்திதூரம் போயிருக்கலாம் என்று எனது விருப்பம். ஆனால், அது உள்ள நிலைமையிலேயே, ஆளும் ராஜாங்கத்தார் ஒரு டயத்தில் அதிக தாராளமாக அதிகாரத்தைக் கொடுத்திருக்கும் சொல்ப மசோதாக்களில் இது ஒன்றாகும். அரசுரிமை நாடுகளுக்கோ சுயாக்ஷி விஷயம் பூராவும் பொருள்படுத்தப் படுகிறது. எந்த அர்த்தத்திலும், கனடா (Canada)வை கிரேட் பிரிடன் 'உடையது' என்று சொல்லுவதற்கில்லை. கிரேட் பிரிடனைப்போல் கனடா (Canada)-வும் பிரிடிஷ் ராஜபக்தியுடையது. கிரேட் பிரிடனைப்போல் அது பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தைச் சேர்ந்தது. அரசுரிமை நாடுகள் கிரேட் பிரிடனுக்குள் அடக்கமில்லை. சமத்துவக் கூட்டில் கிரேட் பிரிடன் மூத்த உறுப்பாகும். எயரின் (Eire) தற்கால மத்தியஸ்தமும், ஆரம்பத்தில் ஜெர்மனியுடன் தென்னாப்பிரிக்கா சண்டையை அறிவிக்கிறதா இல்லையா என்ற தயக்கமும், அரசுரிமைநாடுகள் யுத்தத்தில் இப்பொழுது எடுத்துக்கொண்டிருக்கும் மிகுந்த சிரத்தை தாங்கள் இஷ்டம்போல் மனமொப்பிச் செய்வதை ஞாபகப்படுத்துகிறது. கூட்டுறவில் சுதந்திரம் முக்கிய கொள்கையாக ஐக்கிய தேசங்கள் அமைத்துவருவதை கோயபல்ஸ் (Goebbels) பயப்படுவதுடன் சாபம்போல் சுதந்தரக் கொள்கைக்கு முற்றிலும் விரோதமான கோட்பாடும் ஆளுகையும் உடைத்தான ஜெர்மன் ரீச் (German Reich) சுடன் கொடும்போரில் அவைகள் அமர்ந்துவிட்டது. நாஸி (Nazi) வழிக்குச் சுதந்திரம் விரோதமென்று காட்டும் 'ஜெஸ்டாப்போ' (Gestapo)என்ன, வர்ண ஜனங்களுக்கு குறிப்பிட்ட விதியாகவுள்ள அடக்குமுறைக் கூடாரங்களென்ன, இவைகளைப்பற்றி நான் சொல்லவேண்டிய

தில்லே. நாம் நாஸி (Nazi) ராஜாங்கத்துடன் சண்டைசெய்வது அவற்றின் செய்கைகளேப்பற்றிமட்டுமல்ல. அவைகளின் கொள்கைகளேயும் எதிர்த்தேதான். அடிக்கடி நாம் சொல்லுகிறபடி செய்யத் தவறுகிறோம். ஆனல், நமது குறிப்பிட்ட கொள்கைக்கு நம்மை ஞாபகப்படுத்தக்கூடும். அவர்களோ தாங்கள் எதைச் செய்கிறார்களோ அதைத்தான் சொல்லுகிறார்கள். எந்த உயர்தரக் கொள்கைகளின் சார்பாகவும் அவர்களுக்கு வற்புறுத்திச் சொல்வது பிரயோஜனமற்றதாகும்.

இந்த நெருக்கடியில் எந்தக் கிறிஸ்தவனும் சந்தேகிக்கவோ, தயங்கவோ இடமில்லே. சுவிசேஷத்தில் வியக்தமாகத் தெரிவிக்கிறபடி கிறிஸ்தவ மதம் மனித சுவதந்திரத்தையே ஆதாரமாகவுள்ளது. கிறிஸ்தவர்கள் பல சமயங்களில் இதை கவனிக்கத்தவறிவிடுகிறார்கள். இருந்தாலும் சுவிசேஷத்தின் அறிவிப்பு வியக்தமே. மனிதன் தன்னேக் காப்பாற்றிக்கொள்ள முடியாது. அவனுக்குக் கொஞ்சம் வெளி ஒத்தாசை வேண்டும். ஆனல், தன்னன்னியிலும் அவன் காப்பாற்றிக்கொள்ள இடமில்லாம லிருப்பதால், அவனுக்கு உதவும் மோட்சத்தை அவன் நிராகரிக்கச் செய்யலாம். சுவிசேஷங்களோ, கிருஸ்துநாதர் எங்குமிருந்து ஸ்திரீ புருஷாளின் சுதந்திரப் பான்மைக்கே பிரார்த்திக்கிறார் என்பதைக் காண்பிக்கின்றன. சுதந்திரமே ஒரு முக்கிய ஆதாரம்.

பிரிடனுடையவும், கூட்டுறவு நாடுகளினுடையவும் ஒரு வெற்றியானது உண்மையாகவே ஒரு வழியைக் கற்பிக்குமா என்ற கேள்வி பிறப்பிலிக்கலாம். ஏன் இந்தச் சண்டையையும் மற்றொரு வார்செயில்ஸ் சாமாதானம் தொடரக்கூடாது, 1920-ம் வருஷமுதல் 1939-ம் வருஷம்) வரைபோல் திரும்பவும் ஏற்படக்கூடாது ....என்னுடைய மறுமொழி மூன்று நிலேமையையுடைத்ததாகும். முதலாவது, நாம் பார்க்க நம்பியிருக்கிற நீதியையும், சுதந்திரத்தையுமட்டுமேயல்ல, இன்னும் நாம் ஏற்கனவே ஸ்தாபிதம் செய்திருப்பதையும் சேர்த்து இந்த நாஸி பயமுறுத்துகிறது. கிரேட் பிரிடனிலிருந்து ஐஸ்டாபோவை வெளிநிறுத்தவும், பிரான்ஸ், ஹாலண்டு இன்னம் இதர இடங்களிலிருந்தும் இதை அகற்றவும் சண்டைபோடுவது மிகவும் யோக்கியமானது. இரண்டாவதாக, ஒரு சண்டையில் வெற்றி, தானகவே ஒரு நல்லகாலத்தைப் பிரதிஷ்டை செய்யமுடியாது, இதனல் அதற்கு ஒரு புதியமார்க்கம் ஏற்படுத்தமுடியும், கட்டாயமாக அப்படிச் செய்யும். மூன்ருவதாக, நாம் வெற்றிகளிலிருந்தும், தோல்விகளிலிருந்தும், நம்முடைய சென்ற 20 வருஷகால அனுபோகத்தினல் மிகவும் தெரிந்துகொண்டிருக்கிறோம். கூட்டுறவுநாட்டுச் சங்கம் பயனற்றதாகச் சொல்ல முடியாது, அதனுடைய இணக்கமான ஒத்தாசைகள் முக்கியமாக இந்தத் (??) திறப்பில் மிகவுப் சிரேஷ்டமாகவிருந்துவருகிறது; இது எங்கெங்கே தோல்வியுற்றதோ அவைகளுக்குக் காரணம் நமக்குத்தெரிவதால் நாம் மறுபடியும் அவ்விதம் ஏற்படாமல் அநேகமாய் விலக்கலாம். பிரதானமாகத் தேசங்களின் அவைகளுக்குள்ளுள்ள பண நிர்வாக சம்பந்தத்தைப் பொருட்படுத்தாமல், தேசிய சம்பந்தத்தைமட்டும் ஒழுங்குபடுத்துவது முடியாதகாரியம் என்று

நாம் காண்கின்ேறாம். ஜனங்களின் சுயேச்சைக்கு ஒரு கௌரவத்தையும், நிச்சயமாகக் கிடைக்கக்கூடிய இப்பொழுதிருக்கப்பட்ட தனத்தைக் கொண்டு எல்லா தேசங்களிலுமுள்ள ஜனங்களின் (??) நிலைநாட்டும் ஒற்றுமையையும்—இரண்டு மூல வஸ்துக்களாக வைத்து நம்மால் ஒரு மறுஇணைப்பு வேலை ஆரம்பம் செய்யக்கூடுமானால், நாம் ஜனசமூகத்திற்கே எதிர்கால உத்தரவாதமும், சமாதானமும், நல்லெண்ணமு மளிக்கக்கூடிய ஒரு நிரம்பிய தேசியக் கூட்டுறவின் கால ஆரம்பத்தைப் பிரதிஷ்டை செய்யமுடியும். வெற்றியுண்டானால் இது முடிந்த விஷயம், இல்லாவிட்டால் இதையடைவதற்கு நம்பிக்கையில்லை. ஆகையால் இந்த நம்பிக்கையை யடைய நாமும் நம்முடைய சிரத்தையினால் வெற்றியை நிச்சயப்படுத்துவோம்.

கதம்பம்.

1. "அமெரிக்காவிலிருந்து நமக்கு அனுப்பப்படும் ஆகாயவிமானங்களை நான் மிகவும் உபயோகமுள்ள லாப பாகமாகவே கருதுகிறேன்." (ஸர் பிலிப் ஜோபர்ட், பீ. பீ. ஸி. ஒலிபரப்பு, நவம்பர்மீ 14வ).

2. "ஸ்வதந்திரத்தின் ஆடைகள் இந்தியாவிற்காக தயாராக இருக்கின்றன. இந்த நெருக்கடியான நிலைமையில் இந்தியாவும் ஸ்வதந்திர ஆடைகளை அணிய, தன்னுடைய நடத்தையாலும், சரியான மனோபாவத்தினாலும் யோக்கியதையை ஸம்பாதித்துக்கொள்ளும் என்று நாம் நம்புகிறோம்." (ஸர் எம். ஸவ்ருல்லாகான், டெல்ஹி, நவம்பர்மீ 18வ).

3. "நம்பு, கீழ்ப்படிந்துநட, சண்டைபோடு-என்று முஸோலினி தன்னுடைய ஜனங்களுக்குச் சொன்னார். அவர்களோ முழுமனதுடன் முஸோலினியை நம்பவில்லை, முழுமனதுடனும் சண்டைபுரியவுமில்லை, இன்னும் எவ்வளவு காலந்தான் முஸோலினிக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள் என்பதைத்தான் பார்ப்போமே." (மிஸ்டர் ஹேர்பர்ட் மாரிஸன், லண்டன், நவம்பர்மீ 20வ).

4. "இப்பொழுது நடக்கும் யுத்தமும் சிற்சில தேசத்தார்களுக்குள் ஏற்பட்ட கேவலம் போராட்டு அல்ல. அடிப்படையான சில லக்ஷ்யங்களின் மாறுபாடல்களில் இருந்து இந்த யுத்தம் ஏற்பட்டு இருக்கிறது. நாம் உன்னதமான தர்மங்களில் நம்புகிறோம். அத்தகைய தர்மங்களை ஸ்தாபிக்க காப்புக் கட்டிக்கொண்டு இருக்கிறோம். அவைகளை ஸ்தாபிக்கும்வரையில் நம்முடைய முயற்சியில் நாம் பின்வாங்கப்போவதில்லை; நம்முடைய ஆயுதங்களையும் கீழே வைக்கப்போவதும் இல்லை." (மாக்ஷிமை தங்கிய மன்னர் சக்கரவர்த்தி, நவம்பர்மீ 21வ).

5. "கேவலம் ஒரு பெருங்கொள்ளைக்காகச் சண்டைபோடுவதென்றால், அதுவும் இதாலியர்கள் சிறிய தேசமான கிரீஸின் பேரில் போடும் இச்சண்டை தான். ஜன ஸங்கியையைக் காட்டிலும், சண்டையில் ஊக்கமும், தைர்யமும், ஸ்வதந்திர அபிமானமும்தான், ஜயத்தை ஸ்தாபிக்கக்கூடியது என்பதைக் கிரேக்கர்கள் இச்சண்டையிலும் நன்கு விளக்கிக் காண்பித்துவிட்டார்கள். கிரீஸ் தேச சரித்திரத்திலும், முன்நடந்த ஒவ்வொரு யுத்தத்திலும், மேற்கண்ட உண்மையை ஸ்தாபித்திருக்கிறார்கள்." (ஹாலிபாக்ஸ் பிரபு, நவம்பர்மீ 21உ).

6. "இதுவரை, பூர்ணமாக ஆயுதந்தரித்த ஜர்மானியர்களுக்கும், கால் அல்லது அரைப்பங்கு தயாராக இருந்த பிரிடிஷ் ஸாம்ராஜ்யத்திற்கும் சண்டை நடந்து வந்திருக்கிறது. இந்தப் பலக்குறைவினால் நம்முடைய சண்டை ஒன்றும் கெட்டுப்போகவில்லை." (மிஸ்டர் சர்ச்சில், நவம்பர்மீ 21உ).

7. "எபைரஸ் பிரதேச மலைப்பாங்குகளிலும், அவைகளைச் சேர்ந்த மண்ணும் சேரும் சார்ந்த பள்ளத்தாக்குகளிலும் மின்னற்கொடி சண்டை என்பது ஸாத்தியமில்லை." (முஸோலினி, நவம்பர்மீ 18உ).

8. "ஆங்கிலேயர்கள், ஏதோ ஹிட்லரால் தாங்கள் ஏமாந்து அடிபட்டு விடமாட்டார்கள் என்று நிச்சயமாய் நம்புகிறார்கள். ஆனால் அவர்கள் ஹிட்லரை நாசம் செய்துபோடுவார்கள் என்று உறுதியாய் உணருகிறார்கள்." (லோதியன் பிரபு, நியூயார்க்கில், நவம்பர்மீ 25உ).

9. "நாம் இப்பொழுது எவ்வித கஷ்டங்களை அநுபவிக்கவேண்டும் என்று சற்று கவனித்துப் பார்ப்போம். காபிக்கொட்டை நம்மிடம் இல்லை, உணவுப் பொருள்களை பங்கு வீதம் செய்து கணக்கிட்டுத்தான் அளிக்கிறார்கள். எல்லா வற்றிற்கும் மேலாக, ஆங்கிலேயர்கள் நம்மைச்சுற்றி முற்றுகைபோட்டுவிட்டார்கள். அதுவும் மிகவும் கடுமையாக நடத்தப்பட்டு வருகிறது. ஆனதுபற்றி நமக்குக் கடல் வியாபாரம் இல்லை. நிற்க, சண்டை பலமாகவும், ஆகாயத்தில் இருந்து ஏராளமான விமான எதிர்ப்பும் நடந்து கொண்டிருக்கின்றன." (டெஸ்ரைஷ் (நாஸிபத்திரிகை)-நடப்பு மாத இதழ்).

10. "ஹிட்லரும், ஹிட்லர் குணங்களும் ஏதோ அபூதமாக திடீரென்று ஏற்பட்டிருப்பதாகச் சொல்ல இடமில்லை. சரித்திரம் தோன்றின காலம் முதல், சண்டையிலும் கொள்ளையிலும் வெறிகொண்ட ஜாதியார்கள் வம்சத்தில் அந்த லக்ஷணங்கள் மேலிட்டுக் கொண்டு இயற்கையான வார்ஸாக ஹிட்லர் உதித்து இருக்கிறார்." (ஸர் ரா. வான்ஸிட்டார்ட், லண்டன், நவம்பர்மீ 24உ).

11. "எங்கள் ஜனங்கள் பூராவும், எங்கள் ஸர்வைசுவரியமும் தங்களுக்கே." (மிஸ்டர் எஸ். எம். ப்ரூஸ்,—லண்டனில் ஆஸ்ட்ரேலியா தேசத்து ஹை கமிஷனர்—நவம்பர் 14உ ஒலிபரப்பு).

அனுபந்தம் II.

ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

ஜெர்மானியர்கள் லோகோபகாரிகளாம்!

"பிரிடனே பிறதேசங்களின் உதவியை நாடுகிறது. ஜெர்மனியோ பிரதேசங்களைச் சமத்துவமாய், கூட்டாளிகளாகச் சேர்த்துக்கொள்ளுகிறது. உதாரணமாக இதாலி, ஜப்பான், ஸ்பெயின், ரஷியா தேசங்களைக் கூட்டாளிகளாகச் சேர்த்துக்கொள்ள முயலுகிறது. ஆனால், இந்தத் தேசங்களிலுள்ள அரசியல் முறைகளை மாற்றி அமைக்கமுயலாது" என்று ஹா-ஹாப் பிரபு ஒலிபரப்பியிருக்கிறார்.

சமத்துவம், கூட்டுறவு என்பதெல்லாம் பொய். போலண்டு, ஹாலண்டு, நார்வே, பெல்ஜியம் முதலிய தேசங்களை ஜெர்மனி அடிமையாக்கிவிட்டது. அபிஸீனியாவையும், அல்பேனியாவையும் இதாலி அடிமையாக்கிக்கொண்டது; முடிந்தால் கிரீஸையும் அடிமையாக்கிக்கொள்ளும். மூன்று வருஷகாலம் ஸ்பெயினில் யுத்தம் செய்து, ஸ்பெயினுடைய அரசியலை ஜெர்மனி மாற்றிவிட்டது. "ரஷிய சாம்ராஜ்யம் அழிந்துபோகக் காலம் வந்துவிட்டது. ரஷிய அதிகாரிகள் கொலை பாதகர்கள். உலகமே இதுவரையில் பாராத கொடுமையோடு பத்து வருஷங்களாக அரசு நடத்தியிருக்கிறார்கள்" என்று ஹிட்லர் மைன் காம்பில் தூஷித்திருக்கிறார்.

பூகம்பம்.

நவம்பர் 14-ல் வெளிவந்த ஜெர்மன் அறிக்கைப்படி ருமேனியாவில் பூகம்பத்தால் எண்ணெய் இறைப்பதும், சுத்தி செய்வதும் கொஞ்சமும் தடைப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. இந்த அறிக்கைக்குமேல் வாக்கியத்தில் ருமேனியா பிரதம மந்திரி (ஜெனரல் அன்டொனெஸ்க்யூ, எண்ணெய்க் கிணறுகளிருக்குமிடங்களைப் பார்வையிட்டு கஷ்ட நிவாரண ஏற்பாடுகளைச் செய்துவந்ததாகவும் சொல்லப்படுகிறது. மேலும், எண்ணெய் நிலயங்களுக்கு 50 மைலுக்குளுள்ள நாடகசாலை ஒன்றும், கார்ல்டன் மாளிகையும் அடியோடு நாசமாய்விட்டதாகவும், ஜெர்மன் மந்திரி, கஷ்டநிவாரண நிதிக்குப்பணம் கொடுத்து உதவியதாகவும், எண்ணெய்க் குழாய்கள் பழுதாகிவிட்டதாகவும் (இது 13-ம் தேதியில்) ஜெர்மன் ஒலிபரப்பு வந்திருக்கிறது.

ருமேனியாவில் ஏற்பட்ட பூகம்பத்தால் ஜெர்மானியர் மனம் கலங்கிவிட்டதென்பதில் சந்தேகமில்லை. பிரிடிஷ் விமானங்கள் சனிக்கிழமையன்று புலாயின் துறைமுகத்தைப் பலமாய் பூகம்பம் வந்தாற்போல் தகர்த்து சேதப்படுத்திவிட்டன. இதை மறைப்பதற்கு ஜெர்மானியர் புலாயினில் பூகம்பம் ஒன்று ஏற்பட்டு கட்டடங்கள் விழுந்ததாகவும், பிரிடிஷ் விமானங்களால் சேதமேற்படவில்லையென்றும் பொய் சொல்லுகிறார்கள்.

இது நிற்க, ருமேனியா தேசத்திலுள்ள காம்பினா எண்ணெய்-சுத்தி சாலைகளும், பைகாய், பஸ்டனாரியிலுள்ள எண்ணெய்க் கிடங்குகளும், பிலியோஸ்டி, ஓயர்கியூ, கான்ஸடன்ஸாவிலுள்ள எண்ணெய்க் குழாய்களும் பழுதாய்ப்போனதாக இஸ்டாம்பூலிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

கஷ்ட நிவாரண நிதிக்கு ஜெர்மன் மந்திரி திரவ்ய சகாயம் அனுப்பியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் கையிலிருந்து கொடுக்கவேண்டியதில்லை. ஏற்கனவே ருமேனியாவின் பல பாகங்களைப் பிடுங்கிப் பிறருக்குக் கொடுத்தது போதாதென்று, இப்பொழுது, ஜெர்மன் சைன்யத்தை ருமேனியாவில் நிறுத்தி, போஷிப்பதற்காக நாளொன்றுக்கு 30,000 பவுன் ருமேனியா கொடுக்கும்படி கட்டாயம் செய்யப்பட்டிருக்கிறது.

பிரிடன் சாமர்த்தியமாய்ச் சண்டை செய்கிறது. ஆனால் சும்மாயிருப்பதாக இதாலி பொய் சொல்லுகிறது.

நவம்பர் 13-ம் தேதி, அதாவது, டாரன்டோவை எதிர்த்த மறுநாள், பிரிடிஷ் விமானங்கள் சும்மாயிருப்பதாயும், மத்தியதரைக்கடலிலுள்ள பிரிடிஷ் சைன்யங்கள், நிலத்திலோ, கடலிலோ, ஆகாயத்திலோ ஒரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லையென்றும் இதாலி சொல்லிற்று.

இதற்கு முதல்நாள் அதாவது, நவம்பர் 12-ல் ஒரே போடாகப்போட்டு, இதாலிய கடற்படையில் பாதியை பிரிடிஷ் விமானங்கள் அழித்துவிட்டன. தென்-இதாலி, அல்பேனியா, லிபியாவிலுள்ள முக்கியமான துறைமுகங்களையெல்லாம் குண்டுகளால் சேதப்படுத்திவிட்டன. இதெல்லாம் யுத்தமில்லையென்று சொல்லிவிட்டால், பிறகு சண்டையென்பதுதான் என்ன?

மின்னல் எதிர்ப்பு—இதாலியரின் (முதுகுகாட்டி) ஓட்டம்.

அல்பேனியாவில் புது இதாலியத் துருப்புகள் இறங்கிவிட்டதாகவும், சில தினங்களில் முன்னேறப்போவதாகவும் நவம்பர் 14-ல் ஜெர்மனி ஒலி பரப்பியது. ஆனால், இப்பொழுது பின்னேறிக்கொண்டிருக்கிறார்கள். பின் ஓடும் இதாலியர்களைப் பாதுகாக்கத்தான் புதுத்துருப்புகள் வந்திருக்கவேண்டும்.

ஒரு இதாலியப்பொய் அறிக்கை.

ஒரு இதாலிய நீர்மூழ்கியின் சாமர்த்தியத்தைப்பற்றிப் பின்வருமாறு நவம்பர் 13-ல் இதாலிய அறிக்கையொன்று விடுக்கப்பட்டிருக்கின்றது. “மத்திய தரைக் கடலில் பிரிடிஷ் கப்பல்களை இதாலிய நீர்முழுகியொன்று தனியே சந்தித்தது. அவசரப்பட்டுக்கொண்டு உடனே எதிர்க்கவில்லை. சமயம் பார்த்து, கடைசியாக, டார்பிடோவைப் போட்டுவிட்டு, அது கப்பலில் பட்டுவிட்டதைக் கவனித்துக்கொண்டு, இதரக் கப்பல்களையும் எதிர்க்க அதிக ஆசைப்படாது, பிரிடிஷ் கப்பல்களால் எதிர்க்கப்படாது பத்திரமாய்த் திரும்பி வந்தது.”

அதெல்லாம் சரியே. ஆனால் எதிர்க்கப்பட்ட பிரிடிஷ் கப்பல் மேல் டார்பிடோ படவேயில்லை. பிரிடிஷ் கப்பல் பத்திரமாய்த் துறைமுகம் வந்து சேர்ந்தது. இது நவம்பர் 15-ல் வெளிவந்த பிரிடிஷ் கப்பற்படை விடுத்த செய்தி.

மற்றொரு பொய்—ஜெர்மன் அறிக்கை.

ஜார்விஸ்பே நிகழ்ச்சியில் துணைக்கூட்டிவந்த எல்லா பிரிடிஷ் கப்பல்களையும் முழுகடித்துவிட்டதாகவும், இந்தச் செய்தியை பிரிடிஷ் கப்பல் இலாகா ஒளிப்பதாகவும் ஜெர்மன் அறிக்கை சொல்லுகிறது. பிரிடிஷ் அறிக்கைப்படி ஜார்விஸ்பே நிகழ்ச்சியில் 65 பேர்கள் உயிர் தப்பி கனடாவுக்குப்போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். இது நவம்பர் 14 செய்தி. நவம்பர் 12-ம்௳ செய்திப்படி கூடச்சென்ற 38 கப்பல்களில் தப்பிவந்த 30 கப்பல்களின் பெயர்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. நவம்பர் 15-ம்௳ அறிக்கைப்படி மற்றுமிரண்டு கப்பல்கள் சேதப்படவில்லையென்றும் தெரிகிறது.

ஜெர்மன் படைக்கப்பலால் உடைக்கப்பட்டது 25,453 டன் நிறையுள்ள நாலு கப்பல்கள்தான். பிறகு ஒன்று ஜெர்மன் விமானத்தாலுடைக்கப்பட்டது. பாக்கி ஒரு கப்பலின் முடிவு தெரியவில்லை.

நஷ்டத்தை ஆறுபங்காகப் பெருக்கிச்சொல்லுகிறார்கள்!

B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

தேச சரித்திரம்—மாற்றி எழுதப்படுகிறது.

எகிப்தின் மாஜி பிரதம மந்திரி ஹாஸான் ஸபரி பாஷாவை பிரிடிஷ்காரர்கள் கொன்றுவிட்டதாக நவம்பர் 17-ம் தேதி அறிக்கையில் ஜெர்மனி பேத்துகிறது. உண்மையாக எகிப்து ஜனப்பிரதிநிதி சபையில் நவம்பர் 14-ல் எகிப்து அரசர் விடுத்த அறிக்கையை வாசித்துக்கொண்டிருக்கும்போதே திடீரென்று இறந்தார்; கொல்லப்படவில்லை.

இவர் பிரிடனுக்கு ஆப்த நண்பர். அவர் மரணத்தை எகிப்தில் வருந்துவது போல பிரிடனிலும் வருந்தப்படுகிறது.

இவர் பிரதம மந்திரிப் பதவிக்கு வந்து 1940-ம்௵ ஜூலை௴ 4-ம்தேதி யன்று முதலாவதாக எகிப்து சபையில் பேசியபோதுதான், எழுத்துத் தவறாது, தாத்பரியத்தையும் அனுசரித்து ஆங்கில—எகிப்து ஒப்பந்தத்தை நடத்திவைப்பதாகச் சொன்னார்.

லண்டனில் மசூதி.

பிரிடிஷ் கவர்ன்மெண்டே பிரிடிஷ் கஜானாவிலிருந்து 100,000 பவுன் கொடுத்து லண்டனில் மசூதியொன்றைக்கட்டி, முகமதிய நாகரீகமும், கல்வியும் வளர ஒரு நிலயம் ஸ்தாபிக்கப்படப்போகிறது. பிரிடிஷ் கஜானாவிலிருந்து பணம் கொடுக்கப்போவதில்லையென்றும், முகமதிய லண்டன் வாசிகளிடமிருந்து வசூலிக்கப் போவதாயும் ஜெர்மானியர்கள் பொய் சொல்லுகிறார்கள். எகிப்து ஸ்தானிகரும், சவுதி அரேபியா மந்திரியும், இந்தியா ஹை-கமிஷனரும் நவம்பர் 13-ம் தேதியன்று, பக்கிங்காம் அரண்மனையில் சக்கிரவர்த்தியைப் பேட்டிகண்டு, நன்கொடைக்காக வந்தனம் சமர்ப்பித்தார்கள்.

இது சொல்லாமலே பொய்யென்று விளங்கும்.

ஜெர்மன் ஹிந்துஸ்தானி ஒலிபரப்பு—நவம்பர் 12 :—

"உலகத்தை ஏமாற்ற பிரிடன் மற்றொரு பொய்யைக் கட்டிவிட்டிருக்கிறது. நவம்பர் 8-9 இரவில், ஹிட்லர், ம்யூனிக்கில் பேசும்போது பிரிடிஷ் விமானங்கள் அங்கு வந்து குண்டுகளைப் போட்டதாகச் சொல்லுவதெல்லாம் பொய்."

ஜெர்மன் ஹிந்துஸ்தானி ஒலிபரப்பு—நவம்பர் 13 :—

"நவம்பர் 8-9 இரவு, ம்யூனிக்கில் ஹிட்லரைக் கொலைசெய்ய, பிரிடிஷ் விமானிகள் எத்தனித்தார்கள். முடியவில்லை. சில வீடுகள்தான் பழுதுபட்டன."

ஹிட்லர் ஒரு ராணுவ கேந்திரஸ்தானம்: அவரைக் கொல்லலாம்.

அரசர்களை நேரே எதிர்ப்பது தேச சட்டங்களுக்கு விரோதமென்று நவம்பர் 13-ம் அறிக்கையில் ஜெர்மனி பிரமாதப்படுத்துகிறது. ஆனால் ஜெர்மானியர்கள் இதற்கு முன் நார்வே அரசரையும் பிரிடிஷ், சக்கிரவர்த்தியையும் கொல்லச் செய்த பிரயத்தினங்களை மறந்துவிட்டது.

சட்ட அமைப்புக்குட்பட்ட அரசுபுரியும் அரசர்களின் உரிமை வேறு. சர்வாதிகாரிகளின் அந்தஸ்து வேறு. ஹிட்லர் கவர்ன்மெண்டு மேலதிகாரி என்பதைத் தவிர வேறு ராஜரீக அந்தஸ்து கிடையாது. மேலும், இவர் சேனைத்தலைவர். பிரிடிஷ் சேனைத் தலைவரைப்போல இவரும் யுத்த அபாயங்களுக்கு உட்பட வேண்டியவர்தான்.

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1940— மணி

பிரஸங்கம் XXI.

நவம்பர்	30, சனிக்கிழமை ...	டவுன் ஹால்	...	மாலை	6.30
டிஸம்பர்	1, ஞாயிற்றுக்கிழமை.	வயலோகம்	...	காலை	9.45
	2, திங்கட்கிழமை ...	ஆதனக்கோட்டை	...	மாலை	5.30
	3, செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (A) ஆங்கிலம்	...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை	...	,,	10.25
		கீரனூர்	...	மாலை	5.30
		ஒடையாளிப்பட்டி	...	,,	5.30
		வேகுபட்டி	...	,,	5.30
	4, புதன்கிழமை ...	காலேஜ் (B) தமிழ்	...	காலை	10.25
		வியாபாரிகள் சங்கம் புதுக்கோட்டை, (சாந்தார்கோவில் அம்மன் சன்னதி.)		மாலை	6.30
		ஏம்பல்	...	,,	5.30
		குழிபிரை	...	,,	5.30
	5, வியாழக்கிழமை.	C.S.M. பள்ளிக்கூடம்	...	காலை	10.00
		புதுக்கோட்டை டவுன் உபாத்தியாயர்கள் சங்கம்.		மாலை	3.30
		மிதுலைப்பட்டி	...	,,	5.30

பிரஸங்கம் XXII.

	9, திங்கட்கிழமை ...	டவுன் ஹால்	...	மாலை	6.30
	10, செவ்வாய்க்கிழமை.	புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம்.		,,	5.00
		பொன்னமராவதி	...	,,	5.30
		கீழாநிலை	...	,,	5.30
		பூவரசகுடி	...	,,	5.30
	11, புதன்கிழமை ...	ராங்கியம்	...	,,	5.30
	12, வியாழக்கிழமை ...	திருவப்பூர்	...	,,	5.00
		ஆதனக்கோட்டை	...	,,	5.30
		விராலிமலை	...	,,	5.30
		அன்னவாசல்	...	,,	5.30
	13, வெள்ளிக்கிழமை...	கரம்பக்குடி	...	,,	5.30

1940-ம்ஹு
டிஸம்பர்மீ 6, 7, 8 தேதிகளில்

புதுக்கோட்டை டவுனில்

ஸ்டேட் யுத்த நிதிக்காக

நடைபெறும் உற்சவத்தை

அவச்யம் வந்து பாருங்கள்.

போஷகர் :—மஹா-ா-ா-ஸ்ரீ மன்னர் அவர்கள்.

தீபங்களின் காக்ஷி

❖

விளையாட்டுகள்

❖

பாட்டுகள்

❖

மாந்தரீக வித்தை

❖

பக்கக் காக்ஷிகள்

❖

கிரிக்கட்

டிக்கெட்டுகள் சொல்ப விலைக்கு யுத்த நிதிக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கமிட்டியாரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(ா-தர்பாரவர்கள் ஆதரவின் கீழ்)

Sri Brihadamba State Press, Pudukkottai. 4,400—30-11-40.